
# பரிபூரண ஜீவன்

# PARIPOORANA JEEVAN



கர்த்தாவே, உமது வசனத்தின்படி
என்னை உயிர்ப்பியும்

சங்கீதம் 119:25

## TAMILNADU ASSEMBLIES OF GOD NEWS MAGAZINE

July - August 2021
Volume : 61

ஆண்டு சந்தா ₹ 100/-
Issue : 4

# தமிழ்நாட்டின் எழுப்புதலுக்காக

## ஜெபிப்போம் !




வருவாய்த்துறை நிர்வாகத்துக்காக
தமிழ்நாடு பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| மாவட்டங்கள் | - 38 |
| வருவாய் கோட்டங்கள் | - 87 |
| தாலுகாக்கள் | - 310 |
| பிர்காக்கள் | - 1349 |
| வருவாய் கிராமங்கள் | - 17680 |
| மாநகராட்சிகள் | - 15 |
| நகராட்சிகள் | - 121 |
| ஊராட்சி ஒன்றியங்கள் | - 385 |
| பேரூராட்சிகள் | - 528 |
| கிராம ஊராட்சிகள் | - 12618 |
| மக்களவைத் தொகுதிகள் | - 39 |
| சட்டமன்றத் தொகுதிகள் | - 234 |

மக்கள் தொகை : **8 கோடி**

கிறிஸ்தவர்கள் : **7%**

ஆசிரியரிடமிருந்து........!

# பரிசுத்த வேதமும் எழுப்புதலும்



என் ஆத்துமா மண்ணோடு ஒட்டிக் கொண்டிருக்கிறது. உமது வசனத்தின்படி என்னை உயிர்ப்பியும் (சங்கீதம் 119:25).

உம்முடைய வாக்கு என்னை உயிர்ப்பித்தது (சங்கீதம் 119:50).

கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமா யிருக்கிறது (சங்கீதம் 19:7).

கிறிஸ்துவுக்குள் பிரியமான வாசகர்கள் அனைவருக்கும் இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்! கடந்த மூன்று இதழ்களில் எழுப்புதலைக் குறித்த சில சிந்தனைகள் உங்களோடு பகிர்ந்து கொண்டு வந்தேன். அதின் தொடர்ச்சியாக 'வேதமும் எழுப்புதலும்' என்ற தலைப்பில் சில காரியங்களை இந்த இதழில் பார்ப்போம். வேதாகம சரித்திரத்திலும் சபை சரித்திரத்திலும் எழுப்புதலுக்கு மிக முக்கிய காரணமாக அமைந்தது பரிசுத்த வேதாகமம். கர்த்தருடைய வசனம் முக்கியப்படுத்தப்படும்போதும் பிரசங்கிக்கப்படும்போதும் எழுப்புதல் உண்டாகும். ஏனெனில் கர்த்தருடைய வசனம் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது (யோவான் 6:63). தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாக இருக்கிறது (எபி.4:12) என்று வேதம் கூறுகிறது. ஆகவே தான் சங்கீதக்காரன் 119ம் சங்கீதத்தில் சுமார் 9 முறை உம்முடைய வசனத்தின்படி என்னை உயிர்ப்பியும் என்று வேண்டுகிறான் (சங்.119:25,37,40,88,107,149,154,156,159). கர்த்தருடைய வசனம் நம்முடைய ஆத்துமாவை உயிர்ப்பிக்கும் (சங்.19:7). சபையிலும் பட்டணத்திலும் தேசத்திலும் எழுப்புதலை கொண்டுவரும்!

## வேதத்தின் மூலம் உண்டான எழுப்புதல்கள்

வேதத்தில் தேவனுடைய வார்த்தையின் மூலம் உண்டான பல எழுப்புதல்களை நாம் காண முடியும். அதில் பழைய ஏற்பாட்டிலிருந்து இரண்டும் புதிய ஏற்பாட்டிலிருந்து இரண்டும் நாம் காண்போம்!

### 1. யோசியாவின் நாட்களில் ஏற்பட்ட எழுப்புதல்

யோசியா ராஜா தன்னுடைய ராஜ்யபாரத்தின் 18ம் வருஷத்தில் கர்த்தருடைய ஆலயத்தை பழுதுப்பார்க்க கட்டளையிட்டான். அப்பொழுது பல நாட்களாக காணாமற்போன நியாயப்பிரமாண புஸ்தகம் கண்டெடுக்கப்பட்டது. புஸ்தகத்தின் வார்த்தைகளை ராஜா கேட்டபொழுது, தன் வஸ்திரங்களை கிழித்துக்கொண்டு தன்னை தாழ்த்தி மனந்திரும்பினான் (2இராஜா.22:5-11). பின்பு வசனம் ஜனங்களுக்கு வாசிக்கப்பட்டது. ஜனங்கள் எல்லாரும் வசனத்தை

கைக்கொள்ள உடன்படிக்கைப்பண்ணினார்கள். அதை தொடர்ந்து தேசத்தில் பெரிய ஆவிக்குரிய எழுப்புதல் உண்டானது (2 நாளா. 34).

### 2. எஸ்றா, நெகேமியா நாட்களில் ஏற்பட்ட எழுப்புதல்

பழைய ஏற்பாட்டின் கடைசி நாட்களில் ஜனங்கள் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தப்பின்பு எஸ்றா, நெகேமியா நாட்களில் ஒரு மாபெரும் எழுப்புதலை தேவன் கட்டளையிட்டார் (நெகேமியா 8-10 அதிகாரங்கள்). ஜனங்களுக்குள்ளே வசனத்தை கேட்கவும் அறிந்து கொள்ளவும் பெரிய தாகம் உண்டாயிருந்தது. அதின்படி எஸ்றா காலமே தொடங்கி மதியானம் மட்டும் ஜனங்கள் அனைவரும் கேட்டு அறியத்தக்க வசனத்தை வாசித்தான். ஜனங்கள் கவனமாய் செவிகொடுத்தார்கள். முகங்குப்புற விழுந்து கர்த்தரை பணிந்து கொண்டார்கள். மேலும் வசனத்தின் அர்த்தத்தை சொல்லி விளங்கப்பண்ணினபோது ஜனங்கள் அழுது மனந்திரும்பினார்கள். தொடர்ந்து தினம்தினம் தேவனுடைய நியாயப்பிரமாண புஸ்தகம் வாசிக்கப்பட்டது. ஜனங்களுக்குள் சந்தோஷமும் எழுப்புதலும் உண்டானது (நெகேமியா 8:1-18)!

### 3. பெந்தெகொஸ்தே நாளில் உண்டான எழுப்புதல்

பெந்தெகொஸ்தே நாளன்று ஆவியில் நிரப்பப்பட்ட பேதுரு, கூடிவந்த ஜனங்கள் எல்லாருக்கும் முன்பாக வசனத்தை பிரசங்கித்தான். அப்போஸ்தலர் 2:14-36 வசனங்களில் தேவனுடைய வார்த்தையை மட்டும் ஜனங்களுக்கு எடுத்து கூறினான். ஜனங்கள் அதை கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி மனந்திரும்பினார்கள். அன்றையதினம் மூவாயிரம் பேர் இரட்சிக்கப்பட்டனர் (அப். 2:37-41). சபை பிறந்தது. எழுப்புதல் பற்றி பிடித்தது!

### 4. எபேசு பட்டணத்தில் உண்டான எழுப்புதல்

அப்போஸ்தலனாகிய பவுல் எபேசு பட்டணத்தில் திறன்னு என்னும் ஒருவனுடைய வித்தியாசாலையில் அநுதினமும் இரண்டு வருஷ காலம் கர்த்தருடைய வசனத்தை பிரசங்கித்தும் போதித்தும் வந்தான். ஆசியாவில் குடியிருந்த யூதரும் கிரேக்கருமாகிய எல்லாரும் வசனத்தை கேட்டார்கள். அநேகர் இரட்சிக்கப்பட்டனர். மாய வித்தைக்காரர்கரும் தங்கள் புஸ்தகங்களை சுட்டெரிந்தார்கள். பெரிய எழுப்புதல் உண்டானது (அப். 19:9-20) !

### 5. மார்டின் லூர்த்தர் காலத்தில் ஏற்பட்ட எழுப்புதல்

கி.பி.15ம் நூற்றாண்டில் இருண்டு கிடந்த சபைக்குள் தீப்பந்தமாக எழும்பி இருளை விரட்டியவர் தான் மார்டின் லூர்த்தர் (1483-1546). வேத வசனத்திற்கு புறம்பாக சபையில் நடந்துவந்த காரியங்களை கடிந்துகொண்டு வசனத்திற்கு திரும்பும்படி சவால்விட்டார். வசனம் மட்டும் (SolaScriptura) என்பது அவரது முழக்கங்களில் ஒன்றாக இருந்தது. வசனத்திற்கு புறம்பான உபதேசங்களும் சபை பாரம்பரியங்களும் ஒரு மனிதனை இரட்சிக்காது என்று கூறி ஜனங்களுக்குள் ஒரு பெரிய சீர்த்திருத்தத்தை கொண்டு வந்தார்!

ஆம் அருமையானவர்களே, கிறிஸ்துவின் வார்த்தையும் சுவிசேஷமும்தான் இரட்சிப்பு உண்டாவதற்கு தேவ பெலனாக இருக்கிறது (ரோமர் 1:16). கர்த்தருடைய வார்த்தை ஒரு தனி மனிதனில் எழுப்புதலை

உண்டாக்குகிறது. எந்த சபையிலே கர்த்தருடைய வசனம் முக்கியப் படுத்தப்படுகிறதோ அந்த சபையில் எழுப்புதல் உண்டாகும். கர்த்தருடைய வார்த்தையை பரிசுத்த ஆவியானவருடைய பெலத்தோடு பிரசங்கிக்கும்போது பட்டணத்திலும் தேசத்திலும் எழுப்புதல் உண்டாகும் (1தெச. 1:5,6) !

உற்சாகமான உணர்ச்சிகளோ வெளியரங்கமான அனுபவங்களோ எழுப்புதலாகாது. வேத வசனத்தின் அடிப்படையில் உண்டாகும் மாற்றங்கள்தான் உண்மையான எழுப்புதல். கர்த்தருடைய வார்த்தையை கேட்கும் போதும் வாசிக்கும் போதும், நம்முடைய கண்கள் திறக்கப்படும், இருதயம் கொழுந்துவிட்டு எரியும், வாழ்வில் மாற்றம் உண்டாகும் (லூக்கா 24:31-34)!

## வேதத்தின் மூலம் எழுப்புதல் உண்டாக நாம் என்ன செய்ய வேண்டும்?

கர்த்தருடைய வசனம் நம் வாழ்வில் மாற்றத்தையும் எழுப்புதலையும் கொண்டுவர கீழ்கண்ட காரியங்களை செய்ய தீர்மானிப்போம்!

### வேதத்தை நேசியுங்கள்
### LOVE the Bible

கர்த்தருடைய வசனத்தின் மேல் நமக்கு வாஞ்சையும் நேசமும் இருக்க வேண்டும். சங்கீதக்காரன் 119-ம் சங்கீதத்தில் பல முறை தான் வேதத்தின் மேல் பிரியமாயிருப்பதாக கூறுகிறார் (119:47,48,97,113,119,159,163,167). ஒரு புள்ளி விபரம் கூறுகிறது, இன்று உலகளவில் 18% கிறிஸ்தவர்கள் தான் அனுதினமும் வேதம் வாசிக்கின்றனர். 37% பேர் வாரத்தில் ஒன்று அல்லது இரண்டு முறை வாசிக்கின்றனர். 22% பேர் வாரத்தில் 3 முதல் 6 முறை வாசிக்கின்றனர். 23% பேர் வேதம் வாசிப்பதேயில்லை. கிறிஸ்தவ வாழ்வில் வேதம் எவ்வளவு முக்கியம் என்பதை இன்னும் அறியாமல் பலர் இருக்கின்றனர். நீங்கள் எப்படி? வேதத்தை நேசிக்கிறீர்களா (சங்.119:165)? வேதத்தை அனுதினமும் வாசிக்கும் பழக்கம் உங்களுக்கு உண்டா? (சங். 1:2; நெகே. 8:18).

### வேதத்தை கற்றுக்கொள்ளுங்கள்
### LEARN the Bible

தேவனுடைய வார்த்தையை நேசிப்பது மட்டுமல்லாமல் அதை கிரமமாக வாசித்து கற்றுக்கொள்ள வேண்டும். 119ம் சங்கீதத்தில் 6 முறை "உம்முடைய பிரமாணங்களை எனக்கு போதியும்" என்று தேவ மனிதன் கூறுகிறான் (119:12,26,64,68,124,135). நாமும் அப்படி ஜெபிக்கும்போது கர்த்தர் நமக்கும் தம்முடைய வார்த்தையை கற்றுத்தருவார். ஒவ்வொரு விசுவாசியும் எஸ்றாவைப் போல, பெரோயா பட்டணத்தாரைப் போல தேவ சமுகத்தில் அமர்ந்து கர்த்தருடைய வசனத்தை தியானித்து, ஆராய்ந்து பார்க்கும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும் (எஸ்றா 7:10; அப்.17:11). மேலும் ஆராய்ச்சி நூல்கள், வேத பாட வகுப்புகள் மூலம் வேத சத்தியங்கள், உபதேசங்களை நன்றாக கற்றுக்கொள்ள அர்ப்பணியுங்கள்!

### வேதத்தின்படி வாழுங்கள்
### LIVE the Bible

வேதத்தை கற்றுக்கொண்டு நமது மூளை அறிவை பெருக்கிகொள்ள தேவன் நமக்கு வேதத்தை கொடுக்கவில்லை. வேதத்தின்படி நாம் வாழ தீர்மானிக்க வேண்டும். கர்த்தருடைய வசனத்தின்படி "நடக்கிற" உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள் என்று வேதம் கூறுகிறது (சங்.119:1). நீங்கள் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருக்க வேண்டும் (யாக்.1:22; லூக்கா 6:46,47). தேவன் தம்முடைய வார்த்தையின் மூலம் உங்கள் வாழ்வை மாற்ற ஒப்புக்கொடுங்கள்! அப்பொழுது நீங்கள் நற்குணசாலிகளாகவும், கன்மலைமேல் கட்டப்பட்ட அசையாத வீட்டை போலவும் இருப்பீர்கள்!

### வேத வசனங்களை பகிர்ந்துகொள்ளுங்கள்
### LET others know the Bible

இறுதியாக வேத வசனத்தை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும். "என் நாவு உம்முடைய வசனத்தை விவரித்துச் சொல்லும்" (சங்.119:172) என்றும் "உம்முடைய வார்த்தைகளை ராஜாக்களுக்கு முன்பாக வெட்கப்படாமல் பேசுவேன்" (சங்.119:46) என்றும் சங்கீதக்காரன் கூறுகிறான். எஸ்றா, பவுல் போன்ற தேவ மனிதர்கள் கர்த்தருடைய வார்த்தையை ஜனங்களுக்கு அறிவித்து உபதேசித்தபோது பலரின் வாழ்க்கை மாறியது, எழுப்புதல் உண்டானது (எஸ்றா 7:10; நெகேமியா 8; அப்.19:9-19). சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் திருவசனத்தை ஜாக்கிரதையாய் பிரசங்கம்பண்ணுங்கள் (2 தீமோ. 4:2). சுவிசேஷத்தை அறிவிக்க எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள் (எபே.6:15; 1 பேதுரு 3:15). இவைகளை செய்ய நீங்கள் அனுதினமும் அர்ப்பணிக்கும்போது உங்களிலும் உங்கள் மூலமாகவும் நிச்சயம் எழுப்புதல் வருவதை காண்பீர்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மூத்த போதகர், சிட்டி ரிவைவல் ஏ.ஜி. சர்ச், திருச்சி

---

**தாங்கள் பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு செய்திகள், கவிதைகள், துணுக்குகள், கடிதங்கள், சாட்சிகள் யாவற்றையும் அனுப்பித் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்**

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

**Rev. JERRY DANIEL**
303, C Block, Roshan Residency,
6, VOC Road, Cantonment, TRICHY - 620 001
Cell : 94434 15484



# ஆதி சபையிலிருந்து கற்றுக்கொள்வோம்


Rev. P.S. ராஜமணி

இயக்குநர் - அகில இந்திய விஷன் 2020


## 14. சபைகள் எண்ணிக்கையில் தொடர்ந்து வளர்ந்தன

தொடர்ச்சி

### அன்று

அன்று சபை தொடர்ந்து வளர்ந்து வந்தது. பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு எழும்பி பிரசங்கித்த போது 3000 பேர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்றனர் (அப்போஸ்தலர் 2:41).

இந்த வளர்ச்சி தொடர்ந்தது. பேதுருவும், யோவானும் ஜெபிக்க தேவாலயத்திற்கு போகையில் வழியில் சந்தித்த முடவனை தெய்வீக வல்லமையால் குணமாக்கினர். இதன் விளைவாக சுமார் 5000 பேர் சபையில் சேர்க்கப்பட்டனர் (அப்போஸ்தலர் 4:4).

ஆதிசபையில் தேவ வசனம் விருத்தியடைந்தது (அப்போஸ்தலர் 2:6,7). அதாவது தேவ வசனத்தை மக்களுக்கு பிரசங்கித்தனர். நற்செய்தியை ஊக்கமாய் அறிவித்தனர். இதனால் சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று.

ஆசாரியர்களில் அநேகரும் விசுவாசத்திற்குக் கீழ்ப்படிந்தார்கள். பிலிப்பு மூலமாக சமாரியாவில் பெரிய எழுப்புதல் உண்டானது. பட்டணம் முழுதும் இயேசுவை ஏற்றுக் கொண்டது (அப்போஸ்தலர் 8:8,12).

எத்தியோப்பியா தேசத்தின் நிதி மந்திரியை பிலிப்பு இரட்சிப்பிற்குள் நடத்தி, ஞானஸ்நானம் கொடுத்தான். இதன் மூலம் எத்தியோப்பியாவிற்கு நற்செய்தி பரவிற்று (அப்போஸ்தலர் 8:26-40). அந்தியோகியா பட்டணத்திலே திரளான ஜனங்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு விசுவாசிகளானார்கள் (அப்போஸ்தலர் 11:21).

சுமார் 100 ஆண்டுகளுக்குள் உலகமெங்கும் மக்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டு விசுவாசிகளானார்கள்.

### எருசலேம் சபை தொடர்ந்து வளர்ந்தது

திரளான புருஷர்களும், ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாகிக் கர்த்தரிடமாக அதிகமதிகமாய்ச் சேர்க்கப்பட்டார்கள் (அப்போஸ்தலர் 5:14).

தேவ வசனம் விருத்தியடைந்தது; சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று; ஆசாரியர்களில் அநேகரும் விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந்தார்கள் (அப்போஸ்தலர் 6:7).

சீஷருடைய எண்ணிக்கை தொடர்ந்து வளர்ந்தது. எருசலேமில் சபை ஆரம்பிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளில் சுமார் 20000 பேர் சபையில் சேர்க்கப்பட்டார்கள் என்று கூறப்படுகிறது.

அப்பொழுது யூதேயா, கலிலேயா, சமாரியா நாடுகளிலெங்கும் சபைகள் சமாதானம் பெற்று, பக்திவிருத்தியடைந்து, கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தோடும், பரிசுத்த ஆவியின் ஆறுதலோடும் நடந்து பெருகின (அப்போஸ்தலர் 9:31).

எருசலேமில் மட்டுமல்ல, யூதேயா, கலிலேயா, சமாரியா ஆகிய பகுதிகளிலும் சபைகள் ஆரம்பிக்கப்பட்டு வளர்ந்து பெருகின.

**சபை பக்திவிருத்தியில் வளர்ந்தது**

சபையிலிருந்த விசுவாசிகள் ஆவிக்குரிய நிலையில் வளர்ந்தார்கள். நற்பண்புகளிலும், ஒழுக்க நிலையிலும், தேவனுக்குப் பயப்படுகிற பயத்திலும் வளர்ந்தார்கள், சமாதானத்தில் வளர்ந்தார்கள், கொடுப்பதில் வளர்ந்தார்கள், விசுவாசத்தில் வளர்ந்தார்கள், போதிப்பதில் வளர்ந்தார்கள், அறிவில் வளர்ந்தார்கள், எல்லாவித ஜாக்கிரதையிலும் வளர்ந்தார்கள், போதகர் மேலுள்ள அன்பில் வளர்ந்தார்கள் (2 கொரி. 8:7).

**இன்று**

கிறிஸ்தவ சபைகள் என்று தங்களை அழைத்துக் கொள்ளும் சபைகளில் சுமார் 100 சபைகளில் 90 சபைகள் வளர்ச்சியில்லாமல் அதே நிலையில் இருக்கின்றன.

50 வருடங்களுக்கு முன்பு எத்தனை அங்கத்தினர் இருந்தார்களோ, அதே அங்கத்தினர்தான் இப்போது இருக்கின்றனர். ஆனால் வாரந்தோறும் ஞாயிற்றுக் கிழமைகளில் ஒழுங்காக ஆராதனைகள் நடக்கின்றன. இடை நாட்கள் கூட்டங்கள் நடக்கின்றன. ஆனால் ஒரு வளர்ச்சி இல்லை, ஆவியுமில்லை, அனலுமில்லை. உயிரற்ற நிலை தொடர்கிறது.

மெயின் லைன் சபைகள் என்று சொல்லக்கூடிய சபைகளில் இந்த நிலை அதிகமாய் காணப்படுகிறது. ஆராதனைகளை நடத்துவதற்காக நியமிக்கப்பட்டவர் போதகர். அதற்காகவே அவருக்கு சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஆராதனைகளில் கலந்து கொள்ளும் வேலை மட்டுமே சபை அங்கத்தினர் செய்வது என்ற நிலை காணப்படுகிறது. வளர்ச்சியைப் பற்றி யாரும் சிந்திப்பதுமில்லை, கவலைப்படுவது மில்லை, அதற்கான திட்டம் எதுவுமே இல்லை.

ஆவிக்குரிய சபைகள் என்று தங்களை அழைத்துக் கொள்ளுகின்றவர்கள் மத்தியில் தான் ஓரளவு எண்ணிக்கையில் வளர்ச்சி காணப்படுகிறது.

**சபையில் அங்கத்தினர்களில் வளர்ச்சியில் மூன்று வகை இருக்கிறது**

1) சபை விசுவாசிகளுக்குப் பிறக்கின்ற பிள்ளைகளால் உண்டாகும் வளர்ச்சி.

2) ஒரு சபையை விட்டு அடுத்த சபைக்கு மாறுவதால் வரும் வளர்ச்சி.

3) புதிதாக இயேசுவை ஏற்றுக்கொள்பவர்களால் ஏற்படும் வளர்ச்சி

**திட்டமிட்ட நற்செய்திப் பணி இல்லாதது ஓர் பெரும் குறை**

விதைக்காத இடத்தில் அறுவடை செய்ய முடியாது. சுவிசேஷப் பணி நடைபெறாவிட்டால் சபையில் வளர்ச்சி இருக்காது. ஆதி சபையாருக்கு இருந்த வாஞ்சையும், தாகமும் இப்போதுள்ள பெரும்பான்மையான சபைகளில் இல்லை. சபை ஆராதனைகளில் கலந்து கொள்வது மட்டுமே தங்களுடைய பங்கு என்று சபை அங்கத்தினர்கள் எண்ணுவதால் ஏற்பட்டுள்ள பெரிய குறை இது. இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை பிற மக்களுக்கு அறிவிக்க வேண்டும். அவர்களை இரட்சிப்பிற்குள் நடத்தி சபைக்கு கொண்டு வர வேண்டும் என்ற எண்ணம் இல்லாததினால்தான் 2000 வருடமாய் இந்தியாவில் ஊழியம் நடைபெற்றாலும் அதிக பலன் இல்லை. இந்த நிலை மாற வேண்டும். ஒவ்வொரு சபையும் சுவிசேஷப் பணியை திட்டமிட்டு செய்ய வேண்டும். சபையின் பிரதான ஊழியமாய் இது அமைய வேண்டும்.

பெரும்பாலான சபைகள் எண்ணிக்கையில் வளராதது மட்டுமல்ல. ஆவிக்குரிய நிலையிலும் மிக தாழ்ந்து காணப்படுகின்றன. உலகிலுள்ள கிறிஸ்தவர்கள் எண்ணிக்கை சுமார் 200 கோடி என்று கணக்கிடப்படுகிறது. இவர்களில் எத்தனை கோடிப் பேர் உண்மையில் இயேசு தரும் பாவ மன்னிப்பைப் பெற்று பரிசுத்தராக வாழ்கிறார்கள் என்று நமக்குத் தெரியாது. அன்று சபையில் தேவ பயம் இருந்தது. இன்று தேவனுக்குப் பயப்படும் பயம் குறைந்து போயிருக்கின்றது. துணிகரமான பாவங்கள் சபைக்குள்ளும் நடக்கின்றன என்பது வேதனை. சகல ஜனங்களுக்கும் ஜெப வீடாக இருக்க வேண்டிய சபைகளில் ஜெபக்குறைவு காணப்படுகிறது. ஜெபிக்க வருகின்ற மக்களின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது. பரிசுத்தத்தில் வளர்ந்து பெருகி, இயேசுவைப் போல வாழ வேண்டிய கிறிஸ்தவர்கள் பெயரளவில் கிறிஸ்தவர்களாக இருக்கின்றார்கள். ஆவிக்குரிய நிலையில் அனைவரும் வளர வேண்டும்.

## கொடுப்பதில் வளர்ச்சி தேவை

ஆதி சபையார் கொடுப்பதில் வளர்ந்திருந்தனர். தங்கள் சொத்துக்களை, ஆஸ்திகளை விற்று சபையின் தேவைகளுக்குத் தாராளமாகக் கொடுத்தனர். இன்றும் நன்றாகக் கொடுக்கின்ற சபைகள் இருக்கின்றன. ஆனால் அநேக சபைகளில் வருமானம் மிகக் குறைவாக இருக்கின்றது. அந்த நிலை மாற வேண்டும். தியாக உள்ளம் இருந்தால்தான் தாராளமாக கொடுக்க முடியும். அமெரிக்காவில் ஓர் சிறு சபையாக இருந்தாலும் தாராளமாக கொடுக்க வேண்டுமென்ற மனப்போக்கு போதகருக்கும், சபையாருக்கும் இருக்கின்றது.

நமது சபைகளில் இந்த நிலையில் இன்னும் வளர வேண்டும். வெளிநாடுகளிலிருந்து பணம் வாங்குவதில்தான் நமது போதகர்களுக்கும், விசுவாசிகளுக்கும் ஆர்வம் இருந்தது. இப்போது இந்த நிலை படிப்படியாய் மாறி வருகின்றது. வெளிநாட்டவர் மிஷனரிகளாக இங்கே வந்து ஊழியம் செய்தபோது நமது மக்களின் ஏழ்மை நிலையைக் கண்டு மனமிரங்கி பண உதவி செய்தனர்.

வாங்கியே பழகிப்போன நமது சபைகள் எந்தத் தேவைக்கும் மிஷனரிகளையே சார்ந்திருந்த காலம் இருந்தது. இப்போதும் பல சபைகளில் அந்த நிலை நீடித்தாலும் பெரும்பாலான சபைகள் இந்த மனப்பான்மையை மாற்றிக்கொண்டன. இன்று தென் மாநிலங்களிலுள்ள சபைகள் தாராளமாகக் கொடுத்து வட மாநிலங்களிலுள்ள ஊழியங்களைத் தாங்குவது பாராட்டக்கூடியது.

## ஆதி சபை சமாதானத்தில் வளர்ந்தது

ஆதி சபையில் பரிசுத்தவான்களின் மேற் பார்வையில் சபைகள் சமாதானம் பெற்று வளர்ந்தன. இன்று சபைகளில் பிரிவினைகளும், பூசல்களும், பதவிச் சண்டைகளும் அதிகமாகிவிட்டன. திருச்சபை சொத்துக்களை விற்பதில் பிரச்சனைகள் ஏற்பட்டு நீதிமன்றங்களுக்குப் போகக்கூடிய அளவிற்கு தரம் குறைந்துவிட்டது. இயேசு கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் மூலம் உலகம் நியாயந்தீர்க்கப்படும் என்று நம்புகிறோம். நாமே சபையின் வழக்குகளை நீதிமன்றங்களுக்குக் கொண்டு சென்றால் எப்படி?

ஆவிக்குரிய சபைகளிலும் இந்த நிலை காணப்படுகிறது. நிர்வாகத்திற்கு கீழ்ப்படிய விரும்பாதவர்கள் தங்களுக்கு நீதி கிடைக்க கர்த்தரை நம்பாத நீதிமன்றங்களின் மூலம் தங்கள் பிரச்சனைகளுக்கு தீர்வை எதிர்பார்க்கின்றனர். ஆவிக்குரிய நிலையில் சபை தளர்ந்து வரும்போது இந்தவித பிரச்சனைகள் தலைதூக்க ஆரம்பிக்கும்.

எல்லா சபைகளும் சமாதானம் பெற்று ஆவிக்குரிய நிலையில் வளர தொடர்ந்து ஜெபிப்போமாக!.

- தொடரும்



# நீங்களும் பைபிளை வாசிக்கலாம்

## You too can read the Bible

**Rev. Dr. L. ஜெயபாலன்**

மண்டல தலைமைப் போதகர், திண்டுக்கல் மண்டலம்

**இன்று நீங்கள் பைபிளை வாசித்தீர்களா?**

ஒருவர் தனது இளமைப் பருவத்தில் கதைப் புத்தகங்களை வாசிப்பதில் ஆர்வமாயிருந்தாராம். இதைப் பார்த்த இன்னொருவர், “தம்பி நீ இந்த நூல்களை வாசித்தால் கெட்டுப்போவாய். நீ பைபிளைப் படி, அது உன்னை சரியான பாதையில் நடத்தும்” என அறிவுரை கூறினாராம். அந்த வாலிபர் வேதாகமத்தை தான் சாகும்வரை வாசித்து, திருமணமானவுடன் தனது மனைவியை இயேசுவின் மேல் நம்பிக்கை வைக்கவும், பைபிளை வாசிக்கவும் செய்தார். அது மாத்திரமல்ல தனது பிள்ளைகளையும் வேதாகமத்தை வாசிக்கவும், சங்கீதங்களை மனப்பாடம் செய்யவும் செய்தார். கணவனும், மனைவியுமாக இருவரும் பிள்ளைகளை வேதவசனத்திலும், ஜெபத்திலும், ஆலய காரியங்களிலும் வழிநடத்தினார்கள். அவர்களுக்கு பிறந்த மூத்த குமாரன் தான் நான்.

சூழ்நிலையின் நிமித்தம் பாட்டி வீட்டில் வளர்ந்தேன். இதனிமித்தம் வேதாகமத்தை அனுதினமும் வாசிக்கவில்லை. பெற்றோரிடம் இருக்கையில் பைபிளில் உள்ள வரலாறு போன்றவைகளை மாத்திரம் வாசித்தேன். எனது 18-வது வயதில் தான் ஒழுங்காக வாசிக்க ஆரம்பித்தேன். பைபிள் ஒரு களஞ்சியம்.

இம்மானுவேல் காண்ட் (Immanuel Kant) ஜெர்மனியில் பிறந்தவர். இவர் இறையியல் வல்லுனராகவும், தத்துவ ஞானியாகவும் இருந்தவர். அறநெறி முறையில், கடவுள், சாவாமை, சுயாதீனம் இவைகளை குறித்து விவாதித்தார். இரண்டு காரியங்கள் என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்துகின்றன. “நட்சத்திரங்களையுடைய வானமும், அதனை அடக்கி ஆளும் சன்மார்க்க விதிகளுமே” என்றார். பைபிளைக் குறித்து கீழ்கண்டவாறு கூறினார். இந்த பைபிள் மக்களுக்கு இது வரைக்கும் அவர்கள் அனுபவித்திராத ஒரு பெரிய உதவி. இந்த பைபிளை குறித்து தவறான எண்ணத்தோடு பார்த்தல் மனுக்குலத்திற்கு விரோதமாக செய்யும் குற்றம்.

நாம் அனுதினமும் உபயோகிக்கும் பைபிளை வாசித்து புரிந்துகொள்வதில் மூன்று முறைகள் உள்ளன என ஒரு வேத பண்டிதர் கூறினார்.

A- Apple ஆப்பிள்.... கழுவி அப்படியே சாப்பிடு.

B- Banana வாழைப்பழம்... தோலை உரித்து சாப்பிடு.

C - Coconut தேங்காய்... உடைத்து, பருப்பை எடுத்து சாப்பிடு.

பைபிளின் உள்ள பெரும்பாலானவைகள் ஆப்பிளைப் போன்றவைகள். (உதாரணம்). தேவன் அன்பாகவே இருக்கின்றார். உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள். அவர்களுக்காக ஜெபியுங்கள்”. இன்றைய நாட்களில் வேதகல்லூரியில் முறைப்படி பயின்றவர்கள், பயிலாதவர்கள் அனைவரும் அறுவடை ஊழியத்தில் இருக்கின்றனர். ஒரு வேதப்பகுதியை சரியாக ஆராய்ச்சி செய்து, சபையிலோ, வீட்டுக்கூட்டங்களிலோ அல்லது தொலைக்காட்சியிலோ, யூ டியுப் சேனல்களிலோ பிரசங்கம் செய்ய, அழைப்பு அபிஷேகம், ஆயத்தம், ஆத்தும பாரம், அனுபவம் போன்றவைகள் இன்றியமையாததாகும்.

**கீழ்கண்ட ஆலோசனைகள், தனிப்பட்ட வாழ்விற்கும், பிரசங்கத்திற்கும் மிகவும் உபயோகமாயிருக்கும்.**

1. **"Look at the Text"** (Textual analysis): பொருள் அல்லது வசன ஆராய்ச்சி. நீங்கள் வாசிக்கின்ற வேத பகுதிகளை கவனமாக பாருங்கள். எபிரேய, கிரேக்க வார்த்தைகள், வெவ்வேறு மொழி பெயர்ப்புகளை வாசியுங்கள். (உதாரணம்) . சங்கீதம் 103:1-2 "கர்த்தரை ஸ்தோத்திரி (தமிழ்) மலையாளம்" வாழ்த்துன்னு (Bless the Lord (KJV) Hebrew "Barak- பாராக்" இதன் உண்மை அர்த்தம், "கால்களை மடக்கி, பணிதல், பணிந்து குனிந்து" முழங்கால் படியிடுதல்.

2. **"Look at the Literary form"** (Literary analysis) **:** வாக்கியத் தொடரை கவனித்துப் பாருங்கள். ஒரு வேத பகுதியின் ஆரம்பம், இறுதி பகுதியுடன் இணக்கம் உள்ளதா என கவனித்தல் ஆதி.1:1 ஆதியிலே தேவன்; 2:1 இவ்விதமாக வானமும்... 2:4 வானமும் பூமியும் சிருஷ்டிக்கப்பட்ட வரலாறு இவைகளே.

- **நான் வாசித்த பகுதி செய்யுளா? (Poetry)**:யாத்.15:1-20 "அப்பொழுது மோசேயும் இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தரைப் புகழ்ந்து பாடின பாட்டு கர்த்தரை பாடுவேன்".
- **உரைநடையா? (Prose)**: ஆதி.11:2-28 "பூமியெங்கும், ஒரே பாஷையும், ஒரே விதமான பேச்சும் இருந்தது..." அப்பொழுது கர்த்தர்.
- **தீர்க்கதரிசன பகுதியா? (Prophetic)** : எண்.24:17 "அவரைக் காண்பேன். இப்பொழுது அல்ல... அவரை தரிசிப்பேன், சமீபமாய் அல்ல".
- **சொற்பொழிவா? (Speech)** : அப்.21:40; 22:1 "சகோதரரே, பிதாக்களே.. செவிகொடுப்பீர்களாக" என்றான்.
- **வரலாறா? (Histroy)**: யோபு 1:1 "ஊத்ஸ் தேசத்திலே யோபு என்னும் பேர் கொண்ட ஒரு மனுஷன் இருந்தான்" எஸ்தர் 1:1 பார்க்கவும்.
- **உவமையா? (Parable)**: அறிந்ததிலிருந்து அறியாததை சொல்லுதல் லூக்கா 15:3. "அவர்களுக்கு அவர் சொன்ன உவமையாவது".
- **நீதிமொழியா? (Proverb)** : நீதி.1:1 "சாலமோனின் நீதிமொழிகள்".

**3. "Look at the style of Composition" : உரைநடை, எழுத்து**

நடையைக் குறித்த ஆராய்ச்சி. "திறவுகோல் (Key word)" வார்த்தைகள் யாவை? மாற்கு 1:31- "உடனே" Immediately "உடனே" என்ற வார்த்தை தான் மாற்கு சுவிசேஷத்தின் திறவுகோல் வார்த்தை. "நித்திய ஜீவன்" யோவானின் திறவுகோல் வார்த்தை (யோவான் 3:16) பெயர் சொற்களா? வினைச் சொற்களா? தொடர் வார்த்தைகளா என்பதை பார்க்க வேண்டும். (Noun, Verb, Relational word) வெளி.3:20. இதோ Behold ரோமர் 7:24-ல் "யார் என்னை விடுதலையாக்குவார்" என எழுதும் பவுல் 7:25-ல் கிறிஸ்து மூலமாய் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன் என்று எழுதுகிறார். ரோமர் 8:1-ல் ஆனபடியால்... என தொடர்கிறார். கவனமாக படிக்கும்பொழுது கடவுளின் ஆவியினால் அநேக காரியங்களை கற்றுக்கொள்ள முடியும்.

**4."Study the important words":முக்கியமான வார்த்தைகளின் அர்த்தத்தை அறிதல்**

அதற்கு ஒத்த வாக்கியம் (Concordance) வேத அகராதி (Bible Dictionary) போன்றவை உதவும். (உதாரணம்) : மனம் திரும்புதல், "Heb" எபிரெயம், "Shub" சூப் அதன் விளக்கம் C கொண்டை ஊசி வளைவைப் போன்றது. ஒரு வழியில் இருந்து வேறு வழியில் செல்வதைக்குறிக்கும். பழைய வாழ்க்கையிலே இராமல் புதிய வாழ்க்கை வாழ்வதைக் குறிக்கும். கிரேக்க வார்த்தை Metanoia மெட்டநோயா "Change of attitude"

தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க



# லேவியராகமம் : Leviticus

## புத்தக அறிமுகம்

**Rev. Dr. சாமுவேல் ராஜ் R.**

All India National Director, Global University

ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம் ஆகிய ஐந்து புத்தகங்களை உள்ளடக்கிய பஞ்சாகமத்தின் மூன்றாவது புத்தகமாக அமைகிறது, லேவியராகமம். மோசே, கி.மு.1445-1405க்கும் இடைப்பட்டக் காலத்தில் இப்புத்தகத்தை எழுதினான்.

### யாத்திராகமமும், லேவியராகமமும்:

லேவியராகமம், யாத்திராகமத்துடன் மிக நெருங்கிய தொடர்புடைய புத்தகம் ஆகும். யாத்திராகமம் நான்கு முக்கிய விபரங்களை நமக்குத் தருகிறது என இதற்கு முந்திய இதழில் கண்டோம்:

- இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து விடுதலை பெறுதல்.
- சீனாய் மலையில் தேவனுடைய நியாயப்பிரமாணத்தைப் பெறுதல்.
- ஆசரிப்புக்கூடாரம் ஸ்தாபிக்கப்படுதல்.
- ஆசரிப்புக்கூடாரத்தில் தேவன் தமது மகிமையுடன் வந்துத் தங்கியிருத்தல் (யாத்.40:34).

இஸ்ரவேலர் சீனாய் மலை அடிவாரத்தில் முகாமிட்டிருந்தனர். இக்காலத்தில் தேவன் கொடுத்த மாதிரியின்படியே மோசே ஆசரிப்புக்கூடாரத்தை செய்து கொண்டிருந்தான். ஆசரிப்புக்கூடார வேலை முடிந்ததும் (யாத்.40:17) அவர்கள் அங்கிருந்து பயணத்தைத் தொடர்ந்தனர் (எண்.10:11,12). பயணம் தொடருவதற்கு இரண்டுமாத காலமிருக்கும்போது, யாத்திராகமத்தில் கொடுத்தவைதவிர இன்னும் ஏராளம் பிரமாணங்களை தேவன் மோசேயுடன் நேரடியாகச் சொல்லித்தந்தார். அவற்றையே லேவியராகமத்தில் பார்க்கிறோம். இதனையே, இப்புத்தகத்தின் கடைசி வசனம் இப்படிச் சொல்லுகிறது.

“இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லும்படி, கர்த்தர் சீனாய்மலையில் மோசேக்கு விதித்த கட்டளைகள் இவைகளே” (லேவி.27:34).

எனவே, ‘லேவியராகமம்’ என்னும் தலைப்பிலிருந்து, இப்புத்தகம் லேவியர் மற்றும் ஆசாரியருக்கு மட்டுமே தரப்பட்டப் போதனை எனக்கொள்ளலாகாது; மாறாக, எல்லா இஸ்ரவேலருக்கும் கொடுக்கப்பட்ட தேவனுடைய பிரமாணங்களை இப்புத்தகம் தருகிறது. பலியின்மூலம் தேவனிடத்தில் சேரவேண்டும்; அதன்மூலம் அவர் விரும்புகிற பரிசுத்தத்தைப் பெறமுடியும் என்பவையே இப்புத்தகம் தரும் பிரதானக் கட்டளைகள் ஆகும்.

### லேவியராகமும் புதியஏற்பாடும் :

பரிசுத்தத்தைக் குறித்து லேவியராகமத்தில் இப்படி வாசிக்கிறோம்:

“நான் உங்கள் தேவனாகிய கர்த்தர், நான் பரிசுத்தர்; ஆகையால், தரையில் ஊருகிற எந்தப் பிராணிகளிலும் உங்களைத் தீட்டுப்படுத்தாமல், உங்களைப் பரிசுத்தமாக்கிக்கொண்டு, பரிசுத்தராயிருப்பீர்களாக”.

“நான் உங்கள் தேவனாயிருக்கும்படி உங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின கர்த்தர், நான் பரிசுத்தர்; ஆகையால், நீங்களும் பரிசுத்தராயிருப்பீர்களாக” (லேவி.11:44,45).

இதனையே பேதுருவும் தனது நிருபத்தில் மேற்கோள்காட்டி எழுதுகிறான் (1பேது.1:15,16).

“உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்.

நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே. இதனையே வெளிப்படுத்தின விசேஷத்திலும் பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும் (22:11) என ஆவியானவர் சொல்லுகிறார்,

எனவே, லேவியராகமம் கற்பிக்கும் பரிசுத்தம் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களுக்கு மட்டுமல்லாது பலிகளுக்கெல்லாம் முடிவான பலியாக வந்த கிறிஸ்துவின் பிள்ளைகளாகிய புதியஏற்பாட்டுப் பரிசுத்தவான்களுக்குமுரியது எனப் பார்க்கிறோம்.

**லேவியராகமப் பொருளடக்கம்:**

இப்புத்தகத்திலுள்ள 27 அதிகாரங்களையும் இரண்டாகப்பகுத்து விபரங்களை அறியலாம்.

**லேவியராகமம் 1-16 அதிகாரங்கள்**

லேவியராகமத்தின் முதல் பதினாறு அதிகாரங்கள் பலியின் மூலம் கிடைக்கும் பாவநிவர்த்தியையும் (பிராயச்சித்தம், பாவநிவர்த்தி மரணம் அல்லது பரிகாரமரணம்), பரிசுத்தத்தையும் விவரித்துச் சொல்லுகின்றன.

மனிதன் பாவம் செய்தான்; அந்தப்பாவம் மனிதனை தேவனிடமிருந்து தூரமாய்க் கொண்டு சென்றுவிட்டது. இதிலிருந்து மனிதனை மீட்பதற்கு தேவன் ஏற்படுத்திய பரிகாரபலிகளையே இப்பகுதி நமக்குச் சொல்லுகிறது.

**பரிகாரப் பலிகள்:**

ஏன் செலுத்தப்பட்டன? இரத்தம் சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு உண்டாகாது என்பது வேதாகமப் போதனை (எபி.9:22). எனவே, பழைய ஏற்பாட்டில் செலுத்தப்பட்ட பலிகளெல்லாம் பாவமன்னிப்பிற்காகச் செலுத்தப்பட்டவை ஆகும். தனக்குப் பதிலாக ஒரு பலிமிருகம் கொல்லப்படுவதைப் பார்க்கும் மனிதன், தனது பாவத்தின் கொடூரத்தன்மையை உணர்ந்து தேவனிடம் திரும்ப இப்பலிகள் உதவின. இஸ்ரவேல் ஜனங்கள் தொடர்ந்து கர்த்தரை மையமாகக்கொண்டு வாழுவதற்கும் இப்பலிகள் உதவிசெய்தன.

இயேசுவின் சிலுவை மரணத்துக்குமுன் செலுத்தப்பட்ட பலிகளெல்லாம் வரப்போகும் உண்மையான பலியாகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்அடையாளங்களே ஆகும். பலியாகச் செலுத்தப்பட்ட மிருகமானது இயேசுவுக்கு அடையாளமாக, பாவியின் இடத்தில் அவனது பாவங்களை ஏற்றுக்கொண்டு பலியாயிற்று. அப்படியானால் பலியிடுதல் எதைக் குறிக்கிறது? ஒரு உயிரைக் கொடுத்து இன்னொரு உயிரை மீட்பதைக் குறிக்கிறது.

கிறிஸ்து சிலுவையில் பலியாகச் செலுத்தப்பட்டபோது அவர் நமது பாவங்களை ஏற்றுக்கொண்டு, நமது இடத்தில், நமக்காக மரித்தார்.

தேவனைவிட்டு தூரமாய்ச் சென்றுவிட்ட மனிதன் தேவனிடம் சேருவதற்கு கிறிஸ்துவின் பலிக்குப்பின்னர் மிருகங்கள் பலியிடப்படவேண்டிய அவசியமில்லை.

எந்தவொரு பாவியும், விசுவாசத்துடன் இயேசுவை ஏற்றுக்கொள்ள வேண்டும்; அப்பொழுது அவர்தரும் இரட்சிப்பின் மூலம் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ளவும், பாவத்திற்கான தண்டனையினின்று விடுதலையைப் பெறவும் முடியும்; இது முற்றிலும் இலவசமே!

இந்நிலையில் செலுத்தப்பட்ட சர்வாங்க தகனபலி, ஸ்தோத்திரபலி, பாவநிவாரணபலி, குற்றநிவாரணபலி போன்ற பலிகளனைத்துமே, ஒரு பாவியின் வாழ்க்கையின் குறிப்பிட்ட சூழ்நிலைக்கேற்ப செலுத்தப்பட்டவையே ஆகும்.

**பலியிடப்பட்ட மிருகங்கள்:**

காளை, செம்மறிஆடு, வெள்ளாடு, புறா ஆகியவை தகனபலியாகப் பலியிடப்பட்டன.

- 'காளை', சகிப்புத்தன்மைக்கு முன்உதாரணமாய் இயேசு தம்மை பலியாகத் தந்தார் என்பதைக் காட்டுகிறது எனலாம். அவர் அவமானத்தை எண்ணாமல், சிலுவையை சகித்தார் (எபி.12:2).
- 'செம்மறி ஆடு', முற்றுமான அர்ப்பணத்துக்கு அடையாளம்; கிறிஸ்துவும் சிலுவையின் மரணபரியந்தம் தம்மைத் தாழ்த்தினாரே! ஏசா.53:4-ல் இப்படி வாசிக்கிறோம்: "அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார். ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை. அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாக சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்.
- 'வெள்ளாடு', "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார் (2கொரி.5:21) என்பதையும் மரத்திலே தூக்கப்பட்டவன் எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார் (கலா.3:13) என்பதையும் குறிக்கிறது எனலாம்.
- 'புறா', புறாவைப் போன்றக் கபடற்றத் தன்மையுடனும் எளிய, ஏழ்மை நிலையிலும் இயேசு பலியானார் வறியவர்களுக்காகவும், ஏழைகளுக்காகவும் பலியானார். ஆட்டுக்குட்டியைக் கொண்டுவர சக்தியில்லாத நிலையிலுள்ளவர்கள் தாங்கள் செய்தக் குற்றத்தினிமித்தம் இரண்டு காட்டுப் புறாக்களையாவது, இரண்டு புறாக் குஞ்சுகளையாவது பாவநிவாரணபலிக்காகவும் சர்வாங்க தகனபலிக்காகவும் கொண்டு வரவேண்டும் என்பது தேவன் நியமித்தப் பிரமாணம், (லேவி.5:7; 12:8).

**பலி எப்படி செலுத்தப்படவேண்டும்?**

பலி செலுத்துகிறவர் கர்த்தருடைய சந்நிதியில் தான் அங்கிகரிக்கப்படும்படி பலி மிருகத்தின்மீது கைகளை வைக்க வேண்டும் (லேவி.1:4;3:2,8,13;4:4,15,24, 33;16:21). இது எதைக் குறிக்கிறது? பலிசெலுத்துபவன் பாவஞ்செய்ததினால் மரண தண்டனைக்குள்ளாயிருக்கிறான்; அவனது பாவத்துக்குப் பரிகாரமாக அவன் கொண்டுவரும் மிருகம் பலியாகச் செலுத்தப்படுகிறது. பலி செலுத்தும்போது, தனது பாவ மன்னிப்புக்காக அவன் விண்ணப்பஞ் செய்கிறான். பாவமறியாத ஒரு மிருகத்தை தனது இடத்தில், தனக்குப் பதிலாக ஏற்றுக்கொள்ளுகிறான். தன்னை அந்தப் பலியோடு ஒன்றாகக் கருதுகிறான். அப்படியே, பவுல் கிறிஸ்துவாகிய பலியோடு தன்னை ஒன்றாகக் கருதுவதைக் காண்கிறோம்:

''கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன் ஆயினும், பிழைத்திருக்கிறேன் இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்.

நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்" (கலா.2:20).

''அவருடைய மரணத்துக்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம்".

"அவருடைய மரணத்தின் சாயலில் இணைக்கப்பட்டுள்ளோம்"

''நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்"

"...கிறிஸ்துவுடனேகூட மரித்தோமானால், அவருடனேகூடப் பிழைத்தும் இருப்போம் என்று நம்புகிறோம்".

"அவர் மரித்தது, பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்தார்; அவர் பிழைத்திருக்கிறது, தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார்".

"அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்" (ரோமர் 6:3-11).

தேவனாகியக் கர்த்தர் கொடுத்த கட்டளைகளின்படியே பலிகளை செலுத்தி ஊழியம் செய்த லேவி கோத்திரத்தைச்சேர்ந்த ஆசாரியர்கள் (லேவி.8-10 அதிகாரங்கள்). கிறிஸ்துவின் மத்தியஸ்த ஊழியத்திற்கு நிழலாயிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே ஒரேவித பலிகளை அநேகந்தரம் செலுத்திவந்த ஆசாரியனுடைய பணியும், பலியும் அவசியமில்லாமற்போயிற்று. கிறிஸ்துவோ, பாவங்களுக்காக தம்மையே ஒரே பலியாகச் செலுத்தி என்றென்றைக்கும் தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார் (எபி.10:4-12).

லேவியராகமம் 16-ம் அதிகாரத்தில்வரும் பாவநிவர்த்தி அல்லது பிராயசித்த நாள் என்பது, இயேசு சிலுவையிலறையப்பட்ட அன்று அவரில் நிறைவேறுதலடைந்தது,(Crucifixion).

**லேவியராகமம் 17-27 அதிகாரங்கள்**

லேவியராகமம் 17 முதல் 27 வரையுள்ள பதினொரு அதிகாரங்கள், தமது ஜனங்கள் பரிசுத்தமுள்ளவர்களாவதற்கும், பரிசுத்தமாய் வாழுவதற்குமுரிய தேவ பிரமாணங்களைத் தருகின்றன; அவற்றை கீழ்கண்ட குறிப்புகளால் அறியலாம்:

- தேவனுக்கு முன்பாகப் பரிசுத்தமாய் வாழுவதற்குச் செய்யக்கூடாதவை, செய்ய வேண்டியவை (லேவி.17).
  - கண்ட இடங்களில் பலியிடாமல், கர்த்தருடைய வாசஸ்தலத்தில் மட்டுமே பலிசெலுத்தவேண்டும்.
  - பேய்களுக்குப் பலி செலுத்தலாகாது.
  - இரத்தத்தைப் புசிக்கலாகாது, ஏனெனில் அதில் ஜீவன் இருக்கிறது.
  - தானாய் இறந்ததையும், பீறுண்டதையும் புசித்தவன் தீட்டுப்படுவான்; அவன் அந்தத்தீட்டு நீங்க சுத்திகரிப்புச் செய்யவேண்டும்.
- அனுதின வாழ்வின் ஒழுக்கநிலைகள் மூலம் பரிசுத்த வாழ்க்கை வாழுவதற்குரிய விபரங்கள் 18 முதல் 22 வரையுள்ள ஐந்து அதிகாரங்களில் தரப்பட்டுள்ளன, (லேவி.18-22).

➤ தவறான பாலுறவு சம்மந்தமான ஒழுக்கப்பிரமாணங்கள் (லேவி.18).

➤ பரிசுத்தமாய் வாழப் பின்பற்றவேண்டிய கட்டளைகளும், நியாயங்களும்; சடங்குகள் சார்ந்தப் பிரமாணங்களும் இங்குத் தரப்பட்டுள்ளன (லேவி.19).

➤ கர்த்தர் விதித்த பிரமாணங்களை மீறுவோருக்குத் தரவேண்டியத் தண்டனைகள் (லேவி.20).

➤ ஆசாரியர்களின் நடத்தை விதிமுறைகள்; அங்கீகரிக்கப்படும் பழுதற்றக் காணிக்கைகள் மற்றும் அங்கீகரிக்கப்படாதக் காணிக்கை, பலிகள் பற்றிய விபரங்கள் இப்பகுதியில் தரப்பட்டுள்ளன (லேவி.21,22).

- பண்டிகைகளின் மூலம் ஆராதனை (லேவி.23).

இஸ்ரவேலர் ஆசரிக்கும்படி தேவன் கட்டளையிட்ட பண்டிகைகள் அனைத்துமே சபை கூடிவரும் பரிசுத்த நாட்களாகவும், ஆராதனையாகவும் கொள்ளப்பட்டன. இப்படிப்பட்ட பண்டிகைகள் பற்றிய விபரங்கள் 23-ம் அதிகாரத்தில் தரப்பட்டுள்ளன. பிரதானமானப் பண்டிகைகள் ஏழு; அவையனைத்துமே கிறிஸ்துவில் நிறைவேறுதலடைந்தன.

**பண்டிகை 1**: பஸ்கா பண்டிகை (23:4-5)

பஸ்கா என்ற நிகழ்வு நமதாண்டவரின் இரட்சிக்கும் கிருபையை காட்டுகிறது. கொஞ்சமும் தகுதியற்ற இஸ்ரவேல் மக்கள்மேல் தேவன்கொண்ட மட்டற்ற கிருபையையே அது காட்டுகிறது. அப்படியே இயேசுவின் இரத்தத்தின் புண்ணியத்தால் நாம்பெறும் இரட்சிப்பும் தேவனுடைய மாபெரும் கிருபையே, (எபே.2:8-10; தீத்.3:4-5; 1கொரி.5:7-8; 1பேது.1:18,19).

**பண்டிகை 2**: புளிப்பில்லா அப்பப் பண்டிகை (23:5-8)

பரிசுத்த வாழ்க்கையும், கீழ்ப்படிதலையும் காட்டுகிறது. வேதாகமத்தில் புளிப்பு என்பது பாவத்தைக் குறிக்கிறது, (1கொரி.5:6-8; கலா.5:7-9)

**பண்டிகை 3**: முதற்பலன்களின் பண்டிகை (23:9-14)

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும் பரிசுத்தவான்களின் வருங்கால உயிர்த்தெழுதலையும் குறிக்கும் நிழலாயிருக்கிறது, (1கொரி.15:23; 1தெச.4:13-17; வெளி.20:46).

**பண்டிகை 4:** வாரங்களின் பண்டிகை அல்லது அறுப்பின் பண்டிகை அல்லது பெந்தெகொஸ்தே பண்டிகை (23:15-22).

இந்தப் பண்டிகை நாளில்தான் பரிசுத்தாவியானவர் ஊற்றப்பட்டார். சபை பிறந்த நாள் இதுவே (அப்.2).

**பண்டிகை 5:** எக்காளம் ஊதும் பண்டிகைகள் (23:23-25)

இது கிறிஸ்தவப் பார்வையில் நற்செய்தி அறிவிக்கும் கட்டளைக்கு முன்னடையாளமாகப் பார்க்கலாம்.

**பண்டிகை 6:** பாவநிவாரண நாள் அல்லது பிராயச்சித்த நாள் (23:26-32).

வருடந்தோறும் இஸ்ரவேலர் தங்களைச் சுயபரிசோதனை செய்து மனந்திரும்பும் செயலைக் குறிக்கிறது. இயேசுவின் பிள்ளைகளாகிய நாம் அனுதினமும் நம்மை ஆராய்ந்து சுத்தமாய்க் காத்து முன்னேறுதல் அவசியமன்றோ!

**பண்டிகை 7:** கூடாரப் பண்டிகை (23:33-43)

ஒருவாரம் கொண்டாடப்பட்ட இப்பண்டிகை, தங்களது வனாந்தரப் பயணங்களை நினைவிற்கொள்ளும்படி வெளியே சென்று கூடாரங்களமைத்துக் கொண்டாடினர். நம்முடையத் தாழ்வில் நம்மை நினைத்தவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது (சங்.136:23) என்ற வசனத்திற்கேற்ப தேவன் நம்மை நினைவுகூர்ந்து உயர்த்திய ஆதிநிலைகளை அனுதினமும் நினைவுகூருவது மிகமிக அவசியம்.

மேற்கண்டப் பண்டிகைகளெல்லாம் ஆராதனையின் வெளிப்பாடுகளே. அவற்றில் பரவசக் கொண்டாட்டங்கள் இருந்தாலும், நன்றி செலுத்துதலும், உபவாசமும், தியாகமும், பாவ அறிக்கையும், பலியிடுதலும், மனந்திரும்பிக் கர்த்தரைச் சேருதலும், ஈகையும், புத்துணர்ச்சி பெறுதலும், தங்களைப் புதுப்பித்துக் கொள்ளுதலும் நிறைந்திருந்தன. எனவே, நமது ஆராதனைகளில் இன்று பெருகிவிட்ட ஆட்டம், பாட்டம், கொண்டாட்டங்கள் இதன் வெளிச்சத்தில் கண்டிப்பாய் சரிசெய்யப்பட வேண்டும். ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளும் ஆதித்திருச்சபையின் ஆராதனை முறையில் ‘அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது’ (அப்.4:31) என்னும் ஆவியின் நிறைவின் அனுபவம் நமக்கு அவசியம் தேவை.

- ஆராதனையின் மூலம் பரிசுத்த வாழ்க்கை (லேவி.24-25).

- 26-ம் அதிகாரத்தில், மனந்திரும்பி தேவனை அண்டிவருவோருக்குரிய ஆசீர்வாதங்களைத்தரும் மோசே, விசேஷித்தப் பொருத்தனைகள்மூலம் தங்களைத் தேவனுக்கு அர்ப்பணிப்பது எப்படி என்ற ஆலோசனைகளோடு (லேவி.27). இப்புத்தகத்தை நிறைவு செய்கிறான். இவை அனைத்துமே தேவனுக்கு முன்பாகப் பரிசுத்தமாய் வாழுவதற்குரியப் போதனைகளாகவே அமைகின்றன.

ஏராளம் பிரமாணங்களடங்கிய லேவியராகமப் புத்தகத்தை மூன்று அல்லது நான்கு பக்கங்களில் புத்தக அறிமுகமாக இவ்விதழில் தந்துள்ளோம். இதன் விபரங்களெல்லாம் தெளிவுடன் இதயத்திலும் மனதிலும் பதிய, திறந்த வேதாகமத்துடன் இக்கட்டுரைக் குறிப்புகளை வாசித்தால் பயனடைய முடியும், (இக்கட்டுரையும் அப்படி எழுதப்பட்டதேயாகும்). பரிசுத்தமான நமது தேவன், பரிசுத்தமான நமது இரட்சகரை நமக்குத் தந்து, நம்மை பரிசுத்த ஜனங்களாக்கி, பரிசுத்த ஆவியின் உதவியுடன் நாம் பரிசுத்தமாக அவரில் நிலைத்து வாழ விரும்புகிறார். அதற்கு, இப்புத்தகத்திலுள்ள வசனங்களனைத்தும் தங்கப்பிரமாணங்களே (Golden rules)!.

---

9-ம் பக்க தொடர்ச்சி **நீங்களும் பைபிளை வாசிக்கலாம்** (Rev.Dr.L.ஜெயபாலன்)

வாழ்க்கைத் தன்மையை மாற்றுதல் வேதத்தை பலதடவை வாசித்தோருக்கு ஆவியானவர் மற்ற இணையான வசனங்களை நினைப்பூட்டுவார் யோவான் 14:16. "Comforter" தேற்றரவாளன், ஆலோசகர், அருகில் இருப்பவர், உதவி செய்பவர், நமக்காக வழக்காடுபவர் எனப்பொருள்படும். Parakletos பாராகிளிடோஸ் Para-by the side.

இந்த பரிசுத்த வேதாகமத்தை பரிசுத்த தேவன் என் பெற்றோர் மூலமாக படிக்கச் செய்தார். 1968 முதல் இன்றைய தினம் வரை அதை வாசிக்கிறேன், நேசிக்கிறேன், யோசிக்கிறேன். இன்னும் 23 நாட்களில் 79 தடவை முடித்துவிடுவேன். ஒரு கல்லூரியில் இறையியல் போதிக்கும் மனிதரை சந்தித்தேன். எனது சாட்சியை கேட்டபின், நான் இருதடவை தான் பைபிளை வாசித்திருக்கிறேன் என்றார். இதை வாசிக்கும் சகோதரரே, சகோதரியே வேதத்தை வாசியுங்கள். பரிசுத்த ஆவியின் அபிஷேகம் குடும்ப ஆலோசனைகளுக்கு 94434 74921 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும்.

---

# பிலேயாமின் இரட்டை வேடம்



பிலேயாமின் வாழ்க்கையை மூன்று நிலைகளாக பிரிக்கலாம்.

**1. கர்த்தருடைய தீர்க்கதரிசி :**

பழைய ஏற்பாட்டில் புறஜாதியாரான தீர்க்கதரிசிகள் ஏழு பேர் இருந்தனர். அவர்களில் ஒருவன் பிலேயாம். மற்றவர்கள் பிலேயாமின் தகப்பன் பேயோர், யோபு மற்றும் யோபுவின் நான்கு நண்பர்கள் ஆவர். பிலேயாம் கர்த்தராகிய யெகோவா தான் உண்மையான தெய்வம் என்று அறிந்து, அவரை ஆராதித்தான். பிலேயாம் கர்த்தருடன் நல்ல உறவு கொண்டிருந்தான். ஆகையால் கர்த்தர் அவனுடன் உரையாடினார். மோவாபின் இராஜாவாகிய பாலாக் இஸ்ரவேல் ஜனங்களை சபிக்கச் சொல்லி பிலேயாமை அழைத்தான். பிலேயாம் முதன் முறை வரமுடியாது என்று மறுத்தான். ஆனால் பாலாக் மீண்டும் மீண்டும் அதிகமான வெகுமதிகளை தனது பிரபுக்களிடம் கொடுத்து அனுப்பியபோது பிலேயாம் கர்த்தரிடம் தான் பாலாக்குடன் செல்ல அனுமதி தரும்படி ஜெபித்தான். பிலேயாம் புறப்பட்டு சென்றபோது கர்த்தருடைய தூதனானவர் வழியிலே அவனுக்கு எதிராக நின்றார் (எண்.22:22). அது பிலேயாமுக்கு தெரியவில்லை.ஆனால் அவன் ஏறி சென்ற கழுதைக்கு தெரிந்தது. அற்புதவிதமாக கழுதை வாய் திறந்து பேசி கர்த்தரின் தூதனானவர் எதிரில் நிற்பதை பிலேயாமுக்கு சொன்னது. அதனால் அவன் உயிர் தப்பிப்பிழைத்தான் (எண்.22:21-29). பாலாக் இஸ்ரவேலரை சபிக்கும்படி கூறி பிலேயாமை கிரியாத் ஊசோத், பிஸ்கா மற்றும் பேயோர் என்னும் மூன்று உயரமான இடங்களுக்கு அழைத்துச் சென்றான். மூன்று இடங்களிலும், மூன்று முறையும் பிலேயாம் இஸ்ரவேலை ஆசீர்வதித்தான்.

**2. மனிதனுடைய தீர்க்கதரிசி :**

பிலேயாம் தான் கர்த்தருடைய தீர்க்கதரிசி என்ற உயர்ந்த நிலையை மறந்து மோவாபின் இராஜாவாகிய பாலாக்கை பிரியப்படுத்த எண்ணங்கொண்டு, தான் ஏதோ பாலாக் என்ற தனிமனிதனுடைய தீர்க்கதரிசி என்பது போல் அவன் சொல்வதை செய்ய முற்பட்டான். மூன்று முறைகள் இஸ்ரவேல் மக்களை ஆசீர்வதித்து கர்த்தரைப் பிரியப்படுத்திய பிலேயாம், பின்னர் பாலாக் கொடுத்த பணத்தையும் வெகுமதிகளையும் இச்சித்து, அவனை பிரியப்படுத்த முயற்சித்தான். பொருளாசை என்னும் பாவ இச்சையினால், அவன் அநீதியினால் வரும் கூலியை விரும்பினான் (யூதா 1:11; 2 பேதுரு 2:15).

**3. சாத்தானுடைய தீர்க்கதரிசி :**

கர்த்தருடைய தீர்க்கதரிசியாய் இருந்த பிலேயாம், பண ஆசையினால் மனிதனுடைய தீர்க்கதரிசியாக நிலைமாறி பின்பு முற்றிலும் பாவத்தில் வீழ்ந்து சாத்தானுக்கு அடிமையாகிப் போனான். இதனால் பிலேயாம் பொல்லாத திட்டம் வகுத்து, இராஜாவாகிய பாலாக்கிடம் "நீர் மோவாபிய பெண்களைக் கொண்டு இஸ்ரவேல் ஜனங்களை சோதித்து, விக்கிரக ஆராதனை, வேசித்தனம் என்னும் பாவங்களுக்கு உட்படப்பண்ணினால், அவர்கள் தங்கள் ஆசீர்வாதங்களை இழந்து போவார்கள்", என்று கேடான ஆலோசனை கூறினான் (எண்.25:1-9). அவ்வாறே இஸ்ரவேல் புத்திரர் பாவம் செய்து தேவ கோபத்திற்கு உள்ளாயினர் (வெளி.2:14).பிலேயாமுடைய ஆவிக்குரிய பின்னடைவு/பின்மாற்றம் அவனுடைய மரணத்தில் முடிவுற்றது. கர்த்தருடைய கோபத்திற்கு உள்ளாகி அவன் பட்டயத்தால் வெட்டுண்டு மடிந்தான் (யோசுவா 13:22).

பிரியமானவர்களே நாம் சற்றே சிந்திப்போம். "நான் யாரை பிரியப்படுத்துகிறேன்? கர்த்தரையா?, மனிதர்களையா? அல்லது சாத்தானையா? என் மனம் பொருளாசையினால் நிறைந்திருக்கிறதா?" என்று நம்மை நாமே ஆராய்ந்து அறிவோம்.

Rev. Dr.J.N.மனோகரன்.

# பரிசுத்த ஆவியானவர்

## 1. பரிசுத்த ஆவியானவரின் அடையாளங்கள்

வேதாகம எழுத்தாளர்கள் பரிசுத்த ஆவியானவருக்குக் குறிப்பிட்ட சிறப்பு அடையாளங்களை பயன்படுத்தினர். ஏனென்றால் அவைகள் பல வார்த்தைகள் சொல்வதைக் காட்டிலும் அவரைப்பற்றி அதிக விளக்கங்களைத் தருகிறது.

**1. அக்கினி** (அப்.2:3)

விசுவாசிகளின் வாழ்வில் சுத்திகரிக்கும் சக்தியையும் (வல்லமையையும்) சொல்கிறது. (அப்.2:3; ஏசாயா 6:1-7). அக்கினி வெளிச்சம் காட்டுகிறது (சங்கீதம் 78:14).

**2. காற்று** (யோவான் 3:8)

காற்று அவரின் வல்லமையான புதுவாழ்வூட்டும் சக்தியைச் சொல்கிறது. காற்று அதன் விளைவுகளில் ஆற்றல்மிக்கதாயும், அதன் பலன்கள் பார்க்கக்கூடியதாகவும் இருக்கிறது.

**3. தண்ணீர்** (யோவான் 7:37-39)

தண்ணீர், ஆவிக்குரிய வாழ்க்கையில் விசுவாசிகள் நிரம்பி வழிய ஊற்றப்படுகிற அவரது வல்லமையைப் பற்றிப் பேசுகிறது (எபிரெயர் 10:22; சங்கீதம் 46:4).

**4.முத்திரை** (எபேசியர் 1:13)

முத்திரை, விசுவாசிகளின் மேல் அவருக்குள்ள உரிமையைச் சொல்கிறது.

**5. எண்ணெய்** (அப். 10:38)

எண்ணெய் ஊழியத்திற்கென்று அபிஷேகம் பண்ணப்பட்ட அவரின் வல்லமையைச் சொல்கிறது. எண்ணெய் சுகமாக்குகிறது (வெளி.3:18) மட்டுமல்லாமல் ஆறுதல்படுத்துகிறது.

**6. புறா** (மாற்கு 1:10)

புறா, அவரின் கனிவான, மென்மையான, அமைதியான பண்பைச் சொல்கிறது.

## 2. பரிசுத்த ஆவியானவரின் கிரியைகள்

**விசுவாசிகளின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவரின் பின்வருமாறு கிரியை செய்கிறார்.**

1. பாவத்தைக்குறித்து நம்மைக் கண்டித்து உணர்த்துகிறார் (யோவான் 16:9).
2. தேவ அன்பை நம்மில் ஊற்றுகிறார் (ரோமர் 5:5).
3. நமக்கு ஜெபிப்பதற்கு உதவி செய்கிறார் (ரோமர் 8:26; எபே.6:18; அப். 4:23,24).
4. விசுவாசிகளைப் புதிதாக்குகிறார் (யோ.3:5; தீத்து 3:5).
5. விசுவாசிகளுக்குள் வாசம் செய்கிறார் (ரோமர் 8:11; 1கொரி.6:19).
6. விசுவாசிகளை முத்திரை போடுகிறார் (எபே.1:13,14).
7. நம்மை ஒன்றுபடுத்துகிறார் (1கொரி.12:13).
8. விசுவாசிகளை நிரப்புகிறார் (எபே.5:18).
9. சாட்சிகளாய் மாறுவதற்கு வல்லமையும், தைரியமும் தருகிறார் (அப்.1:8; 4:31; 6:9;10).
10. விசுவாசிகளை வழிநடத்துகிறார் (ரோமர் 8:14)
11. விசுவாசிகளுக்கு ஆவிக்குரிய வரங்களை பகிர்ந்தளிக்கிறார் (1கொரி.12:1-11).
12. நம்மை ஆராதனை செய்ய வழிநடத்துகிறார்.
13. அவருடைய கனிகளை நம்மிலே வளரச் செய்கிறார்.
14. நம்மை ஆறுதல்படுத்தி, ஊக்குவிக்கிறார்.
15. கிறிஸ்துவின் வருகைக்காக நம்மை ஆர்வப்பட வைக்கிறார் (ரோமர் 8:23; வெளி.22:20).

## 3.ஆவியானவருக்கு விரோதமான பாவங்கள்

1. பரிசுத்த ஆவியை தூஷித்தல் (மத்.12:31,32).
2. பரிசுத்த ஆவியை எதிர்த்து நிற்பது (அப்.7:51).
3. பரிசுத்த ஆவியை துக்கப்படுத்துவது (எபே.4:30,32).
4. பரிசுத்த ஆவியை அவித்துப்போடுவது (1தெச.5:19).
5. பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்வது (அப்.5:3).

## 4. பரிசுத்த ஆவியின் கனிகள்

அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் (கலா.5:22,23)

## 5. பரிசுத்த ஆவியின் வரங்கள் (1 கொரி. 12:8-10)

1. ஞானத்தைப் போதிக்கும் வரம்.
2. அறிவை உணர்த்தும் வரம்.
3. விசுவாசம்.
4. குணமாக்கும் வரம்.
5. அற்புதங்களைச் செய்யும் வரம்.
6. தீர்க்க தரிசனம் உரைக்கும் வரம்.
7. ஆவிகளைப் பகுத்தறியும் வரம்.
8. பற்பல பாஷைகளைப் பேசும் வரம்.
9. பாஷைகளை வியாக்கியானம் செய்யும் வரம் வாசிக்கவும் : மாற்கு 16:17-18; ரோமர் 12:6-8; எபேசியர் 4:8-13; 1பேதுரு 4:10-11).



# கடனற்ற வாழ்வு - A Life without Debt!


## Rev. N. ஜான்சன்

நிறைவாழ்வு மையம் ஏ. ஜி. சபை, திருவேற்காடு
பொருளாளர், தமிழ்பிரதேச அசெம்பிளீஸ் ஆப் காட்
ஆண்கள் ஐக்கியம்


பல நூற்றாண்டுகளுக்கு முன் ஹேட்டம் டாய் என்ற அராபிய வள்ளல் 100 ஒட்டகங்களை வெட்டி பிரம்மாண்டமான விருந்து ஒன்றை ஏற்பாடு செய்தார். பணக்கார பிரபுக்கள் முதல் ஏழை விவசாயிகள் வரை யாவருக்கும் அழைப்பு கொடுத்தார். விருந்து நடைபெறும் அன்று யாராவது விடுபட்டுவிட்டார்களா என்று தோப்புக்குள் சென்றபோது பார்த்தபோது, ஒரு வயதான விறகு வெட்டி கஷ்டப்பட்டு விறகு வெட்டிக்கொண்டு இருந்தார். ஹேட்டம் அவரைப் பார்த்து நீங்கள் விருந்தைக் குறித்து கேள்விப்படவில்லையா? என்று கேட்டார். அதற்கு அந்த விறகுவெட்டி, ஐயா, விறகுவெட்டிப் பிழைத்தாலும் நான் யாருக்கும் கடன்பட விரும்பவில்லை என்று சொன்னார்.

உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சொன்னபடி உன்னை ஆசீர்வதிப்பதினால், நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன் கொடுப்பாய், நீயோ கடன் வாங்குவதில்லை; நீ அநேகம் ஜாதிகளை ஆளுவாய், உன்னையோ அவர்கள் ஆளுவதில்லை (உபா.15:6) என்ற வாக்குத்தத்தத்தின்படி நாம் கடன் வாங்கும் நிலையில் அல்ல கடன் கொடுக்கும் நிலைக்கு உயரவும் நாம் ஒன்றிலும் குறைவில்லாமல் வாழவும் தேவன் விரும்புகிறார்.

நம் வேதம் ஆவிக்குரிய காரியங்களை மட்டுமல்ல, பூமிக்குரிய வாழ்வில் நாம் எப்படி வாழவேண்டும் என்றும் ஆலோசனைகளை தருகிறது. வேதம்கூறும் பின்வரும் நான்கு ஆலோசனைகளை பின்பற்றி நடக்கும்போது பொருளாதாரத்தில் நாம் நிச்சயம் தன்னிறைவடைய முடியும்.

## 1. சம்பாதிக்க வேதம் கூறும் ஆலோசனைகள்

எப்படியும் சம்பாதிக்கலாம் என்று உலகம் ஓடிக்கொண்டிருக்கையில், இப்படித்தான் சம்பாதிக்க வேண்டும் என்று வேதம் நமக்கு சில வரைமுறைகளை வைக்கிறது.

**உழைத்து சம்பாதிக்க வேண்டும்:** உங்கள் சொந்த அலுவல்களைப் பார்க்கவும், உங்கள் சொந்தக் கைகளினாலே வேலைசெய்யவும் வேண்டுமென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறோம் (1தெச.4:12) என்று பவுல் கூறுவதுபோல கர்த்தருடைய பிள்ளைகள் கடுமையாக உழைத்து சம்பாதிக்க வேண்டும்.

**நேர்மையாக சம்பாதிக்க வேண்டும்:** அதுமட்டுமல்ல, புறம்பேயிருக்கிறவர்களைப் பற்றி யோக்கியமாய் நடந்து, ஒன்றிலும் உங்களுக்குக் குறைவில்லாதிருக்கும் படிக்கு (1தெச.4:11) என்ற ஆலோசனையின்படி இரட்சிக்கப்படாத மக்களைப்போல குறுக்குவழியில் சம்பாதிக்காமல், நாம் யோக்கியமாக, நேர்மையாக சம்பாதிக்க வேண்டும்.

**சோம்பேறித்தனம் கூடாது:** கர்த்தருடைய பிள்ளைகள் எந்த வேலைக்கும் போகாமல், வீண் அலுவற்காரராக, ஒழுங்கற்றுத் திரியக்கூடாது (2தெச.3:11). மாறாக மற்றவர்களுக்கு உதவி செய்யும் விதத்தில் வாழ்வில் உயரும்படியாக கடுமையாக உழைத்து சம்பாதிப்பவர்களாக வாழவேண்டும்.

## 2.செலவுகளைக் கட்டுப்படுத்த வேதம் கூறும் ஆலோசனைகள்

கஷ்டப்பட்டு உழைத்து சம்பாதித்த பணத்தை அநேகர் வீணாக செலவுசெய்துவிட்டு, அவசரத் தேவைகளுக்கு கடன்வாங்கி சிக்கிக்கொள்வதைக் காண்கிறோம். செலவுகளை ஒரு கட்டுக்குள் வைக்க நாம் செய்ய வேண்டியவை:

**இருப்பதில் திருப்தியாக வாழ வேண்டும்:** ஆசையானது அலைந்து தேடுகிறதைப் பார்க்கிலும் கண் கண்டதே நலம்... (பிர.6:9) என்று ஞானி சொல்வதுபோல, நாம் அநுபவிக்கும்படி கர்த்தர் என்ன ஆசீர்வாதங்களைக் கொடுத்திருக்கிறாரோ அவைகளில் திருப்தியடைய வேண்டும்.

**எளிமையாக வாழ வேண்டும்:** வறட்டு கௌரவத்திற்காகவும், மற்றவர்கள் உங்களைப் பெருமையாகப் பேசவேண்டும் என்பதற்காகவும் ஆடம்பரமாக செலவு செய்து கடனாளிகளாக மாறிவிடாதீர்கள். ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது (மத்.5:3) என்று ஆண்டவர் இயேசு சொல்வதுபோல நம் உள்ளத்தில் ஒரு எளிமை வந்துவிட்டால் வாழ்விலும் எளிமை வந்துவிடும்.

**வரவு செலவை திட்டமிட்டு வாழ வேண்டும்:** உங்களில் ஒருவன் ஒரு கோபுரத்தைக் கட்ட மனதாயிருந்து, (லூக்கா 14:28) ...அதைக் கட்டித் தீர்க்கிறதற்குத் தனக்கு நிர்வாகமுண்டோ இல்லையோ என்று முன்பு அவன் உட்கார்ந்து செல்லுஞ்செலவைக் கணக்குப் பாராமலிருப்பானோ? (லூக்கா 14:30) என்று இயேசு கிறிஸ்து சொல்வதுபோல நாம் வரவு செலவு பட்ஜெட் போட்டு நம் வருமானம் என்ன? நம் செலவை கட்டுக்குள் வைப்பது எப்படி? என்பதை திட்டமிட வேண்டும்.

## 3.கடனை அடைக்க வேதம் கூறும் ஆலோசனைகள்

கர்த்தருடைய பிள்ளைகள் மற்றவர்களுக்கு கடன்கொடுக்கும் நிலைக்கு உயரவேண்டுமே அன்றி நாம் ஒருபோதும் கடன்பட்டுவிடக்கூடாது. ஒருவேளை நீங்கள் கடனில் இருப்பீர்கள் என்றால் என்ன செய்ய வேண்டும்?

**புதிதாக கடன் வாங்காதீர்கள்:** "ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனேயல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்..." (ரோமர் 13:8) என்று வேதம் கூறுவதுபோல புதிதாக கடன் வாங்கி பழைய கடனை அடைக்க முயற்சிக்காதீர்கள். அது மேலும் அதல பாதாளத்தில் உங்களை கொண்டு சென்றுவிடும்.

**திட்டமிட்டு கடனைத் திரும்பச் செலுத்துங்கள்:** வாங்கியக் கடனை எப்படியாவது திரும்ப செலுத்த முயற்சி எடுங்கள். துன்மார்க்கன் கடன்வாங்கிச் செலுத்தாமற்போகிறான்; நீதிமானோ இரங்கிக்கொடுக்கிறான் (சங்.37:21) என்று வேதம் தெளிவாகச் சொல்கிறது. உங்கள் கடன்களைக் குறித்த விவரங்களை ஒரு பட்டியலிட்டு அதிக வட்டி கொடுக்கும் கடனை முதலில் அடைத்து முடியுங்கள். அதன் பின்பு சிறிய கடன்களையும் கடைசியாக வட்டியில்லாத கடன்களையும் அடைத்துத் தீருங்கள்.

**கூடுதல் வருமானத்திற்கு திட்டமிடுங்கள்:** கடனை அடைக்க உங்களுடைய வருமானம் போதவில்லை என்றால் கூடுதலாக ஏதாவது பகுதி நேர வேலை செய்யுங்கள். ஆட்டுமயிரையும் சணலையும் தேடி, தன் கைகளினால் உற்சாகத்தோடே வேலைசெய்கிறாள் (நீதி.31:13) என்று வேதம் சொல்வதுபோல, வீட்டிலிருக்கும் பெண்கள் ஏதாவது கைத்தொழில் செய்து கூடுதல் வருமானம்

ஈட்டுங்கள். இப்படிக் குடும்பத்தில் உள்ள அனைவரும் உழைத்தால் நிச்சயம் கடனிலிருந்து நீங்கள் மீண்டு விடலாம்.

## 4.சேமிக்க வேதம் கூறும் ஆலோனைகள்

**ஏன் சேமிக்க வேண்டும்?** உன் ஆகாரத்தைத் தண்ணீர்கள்மேல் போடு; அநேக நாட்களுக்குப் பின்பு அதின் பலனைக் காண்பாய். ஏழுபேருக்கும் எட்டுபேருக்கும் பங்கிட்டுக்கொடு; பூமியின்மேல் என்ன ஆபத்து நேரிடுமோ உனக்குத் தெரியாது (பிர.11:1,2) என்று வேதம் கூறுவதுபோல, எதிர்பாராத தேவைகளுக்காகவும், வாகனம் வாங்குதல், வீடுகட்டுதல், பிள்ளைகள் மேற்படிப்பு மற்றும் திருமணம் போன்ற அத்தியாவசியத் தேவைகளுக்காகவும், வயதான காலத்தில் சொந்தக்காலில் நிற்கவும், எல்லாவற்றிற்கும் மேலாக தேவனுக்காகக் கொடுக்கவும் சேமிப்பு அவசியம்.

**எப்படி சேமிக்க வேண்டும்?** அவர்கள் திருப்தியடைந்தபின்பு, அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒன்றும் சேதமாய்ப் போகாதபடிக்கு மீதியான துணிக்கைகளைச் சேர்த்துவையுங்கள்... (யோவான் 6:12) என்று நம் கர்த்தர் கட்டளையிட்டுள்ளதுபோல, உங்கள் உணவு, உடை, இருப்பிடம் போன்ற அத்தியாவசியத் தேவைக்கான செலவுகள் போக மீதமுள்ளவைகளை சேமித்து வையுங்கள்.

எவ்வளவு சேமிக்க வேண்டும்? இப்படிப் பார்வோன் செய்து, தேசத்தின்மேல் விசாரணைக்காரரை வைத்து, பரிபூரணமுள்ள ஏழு வருஷங்களில் எகிப்துதேசத்திலே விளையும் விளைச்சலில் ஐந்தில் ஒரு பங்கை வாங்கும்படி செய்வாராக (ஆதி.41:34) என்ற யோசேப்பின் ஆலோசனை இன்றும் நமக்குப் பொருந்தும். மாதசம்பளம் கைக்கு வந்தவுடன் முதலாவது தேவனை ஸ்தோத்தரியுங்கள். அடுத்து பத்தில் ஒன்றாகிய தசமபாகத்தை கர்த்தருக்காக பிரித்து வையுங்கள். அதன்பின்பு பத்தில் இரண்டு பாகத்தை சேமிப்பில் வைத்துவிடுங்கள். மீதமுள்ள பணத்தில் சிக்கனமாக குடும்பத்தை நடத்துங்கள். ஆரம்பத்தில் இது கடினமாக இருந்தாலும் பின்நாட்களில் கடனற்ற, மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு நேராக இது உங்களை வழிநடத்தும்.

பிரியமானவர்களே! மேலே சொல்லப்பட்ட வேதத்தின் நான்கு ஆலோசனைகளையும் பின்பற்றி நடந்தால் நிச்சயம் பொருளாதாரத்தில் நீங்கள் தன்னிறைவு அடைவது மட்டுமல்ல, மற்றவர்களுக்குக் கொடுக்குமளவு உங்கள் வாழ்க்கைத் தரம் உயரும் என்பதில் சந்தேகமில்லை.

---

## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள், எனவே உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ. **1,00,000** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.

---



# எழுப்புதலின் விளைவுகள்


**Rev. J. தேவதாசன் கலையரசன்**

Regional Overseer, North Central Region


அன்பானவர்களே, நாம் எப்போதும் இல்லாத அளவு எழுப்புதலை வாஞ்சிக்கிறோம். எழுப்புதல் இன்னதென்று அறிய, புரிந்து கொள்ள, கற்றுக்கொள்ள நாடுகிறோம். நமது ஜெபங்களின் நோக்கம் எல்லாம், எழுப்புதலே வாஞ்சை என்ற இலக்காக மாறுகிறது. இரண்டு விசுவாசிகள் கூடினால் நமது நாட்களில் எழுப்புதல் நடந்துவிடாதா? என்ற ஏக்கம் வெளிப்படுகிறது. இன்று எழுப்புதல் பேசும் பொருளாகிவிட்டது.

நமது சபைகளில் அடுத்த பத்தாண்டுகள் எழுப்புதலுக்கான வருடங்களாக அறிவிக்கப்பட்டு முழு ஆயத்தமாகி வருகிறோம். சபையின் எழுப்புதலை நோக்கிய பயணமும், முன் ஆயத்தங்களையும் பார்க்கையில் எழுப்புதல் முன் எப்போதும் இருந்ததைவிட, மிக சமீபமாகிவிட்டது என்பதை உணர முடிகிறது.

இச்சூழலில் எழுப்புதல் தாரும் என்று ஜெபிக்கிற அனைவருமே பொருள் உணர்ந்து தான் ஜெபிக்கிறார்களா என்ற ஐயம் ஏற்படுகின்றது. சுகம் தாரும், பணம் தாரும், வேலைதாரும் போன்ற ஜெபக்குறிப்புகளில் ஒன்றாக ‘எழுப்புதல் தாரும்’ என்பதையும் சிலர் சேர்த்துவிட்டார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது.

எனவே எழுப்புதலுக்காய் ஜெபிப்பவர்கள் எப்படிப்பட்ட எழுப்புதல் வர காத்துக்கொண்டிருக்கிறோம்? என்பதை அறிவுறுத்த வேண்டியது அவசியம். அப்போது தான் நமது ஜெபங்கள் இன்னும் அர்த்தமுள்ளதாகும், தீவிரமடையும்.

இரவு முழுவதும், சிறையிலிருந்த பேதுரு விடுவிக்கப்பட வேண்டும் என்று ஜெபித்துக்கொண்டிருந்த சபைக்கு, பேதுருவின் விடுதலையை நம்ப முடியவில்லை. அனுபவித்துக்கொண்டாட முடியவில்லை (அப்.12:5-16). எனவே எழுப்புதலுக்காக ஜெபிக்கும் அனைவரும் எழுப்புதலை இன்னதென்று அறியவும், அது கிடைக்கும் நேரத்தில் தவறாமல் அனுபவிக்க உதவிடும் போதனைகளை சபைக்கு கொடுக்க வேண்டியது அவசியமாகிறது.

### I. மாபெரும் விளைவுகளை உங்களுக்குள் ஏற்படுத்தும் வல்லமை கொண்டது எழுப்புதல்

எழுப்புதல் தாரும் என்று நீங்கள் ஜெபித்து வருவது சாதாரணமானது அல்ல.

1.கோழைகளாய், சுயநல விரும்பிகளாய், இருந்த சீஷர்களை ஒரு நொடிப் பொழுதில் மாற்றின பரிசுத்தாவியின் வல்ல அபிஷேகம் ஊற்றப்பட்டதே, அதே அனுபவத்தை மீண்டும் பெறவே ஜெபிக்கிறீர்கள் (அப். 2:1-14).

2.பேதுரு கண்டித்து உணர்த்திய ஒரு பிரசங்கத்தை கேட்டதும் மார்பில் அடித்துக்கொண்டு, நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று 3000பேர் கதறினார்களே, அதுபோன்று ஒரு அசாதாரண சூழ்நிலையை நீங்கள் உங்கள் கண்களினால் காண, அல்லது நீங்களே அனுபவிக்க ஜெபித்துக் கொண்டிருக்கிறீர்கள் (அப். 2:36-41).

3.உம்முடைய பிரசன்னம் வேண்டும். நீர் எங்களோடு வராவிட்டால் அவ்வளவுதான் என்று மோசே புலம்பினபோது அந்த ஜெபம் தேவனையே அசைத்து மோசே பக்கம்

திரும்ப வைத்த, அச்சம்பவத்தைப் பாருங்கள். அது போன்ற அனுபவத்தை மீண்டும் காண, அதாவது தேவ பிரசன்னத்தை நீங்கள் அனுபவிக்கவே ஜெபித்துக் கொண்டிருக்கிறீர்கள் (யாத். 33:14-17).

4. தன்னை பாவியாக ஒத்துக்கொள்ளாத ஒருவர் தேவ ஊழியரால் கண்டித்து உணர்த்தப்பட்டபோது மனந்திரும்பி, உயிர்ப்பியும் என்று கதறினாரே, அந்த உயிர்ப்பித்தலின் அனுபவத்தையே நீங்களும் காண, அனுபவிக்க ஜெபித்துக் கொண்டு இருக்கிறீர்கள் (சங். 51:7-13).

### II. எழுப்புதலின் கடந்த கால விளைவுகளைப் பாருங்கள்.

அப்போதுதான் நீங்கள் எப்படிப்பட்ட எழுப்புதலுக்காய் ஜெபித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை அறிந்து கொள்வீர்கள்.

#### 1. உடனடி விளைவுகள்

- ★ மக்கள் மனந்திரும்பினார்கள் (அப் 2:38-41).
- ★ இயேசுவே ஆண்டவர் என ஏற்றுக்கொண்டார்கள் (அப். 2:41).
- ★ கூட்டம் கூட்டமாக தேவனிடம் திரும்பினார்கள் (அப். 2:41, 4:21).
- ★ அல்லது அனுதினமும் மக்கள் சபையில் சேர்க்கப்பட்டார்கள் (அப். 2:47).

#### 2. நீண்ட கால விளைவுகள்

- ★ சுவிசேஷ ஊழியம் முக்கியமானதாக மாறியது. சீஷரின் தொகை பெருகிற்று (அப். 4:31, 6:7).
- ★ சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன (அப். 9:31).
- ★ மிஷன் இயக்கம் தோன்றி உலக சுவிசேஷப்பணி துவங்கியது. இப்படி எழுப்புதல் என்பது விவரிக்க முடியாத பெரிய விளைவுகளை ஏற்படுத்தியது. மொத்தத்தில் சரித்திரத்தையே புரட்டிப்போட்ட அனுபவங்கள் மீண்டும் நடைபெற வேண்டும் என்பதைத்தான் **எழுப்புதல் தாரும்** என்று ஜெபித்து கொண்டிருக்கிறார்கள் (அப்.13:1-14).

ஒரு தனி மனிதனில், குடும்பத்தில், சபையில், ஸ்தாபனத்தில், தேசத்தில், பரிசுத்த ஆவியானவரால் இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் ஏற்பட இருக்கும் மாபெரும் அனுபவமே, அசாதாரண சூழலே **எழுப்புதல்**. அப்படிப்பட்ட எழுப்புதல் பெறவே தீவிரமாக, எழுப்புதல் தாரும் என ஒற்றைக் குரலில் மன்றாடி வருகிறோம்.

### இறுதியாக

இன்றைய ஆராதனை எழுப்புதலாக இருந்தது, போதகரின் பிரசங்கம் எழுப்புதலாக இருந்தது. சபையாரின் எழுப்புதலால் இந்த மாபெரும் ஆலயம் கட்டப்பட்டது என்ற சாதாரண அனுபவங்களுக்கும் நாம் எழுப்புதல் என்ற பதத்தையே பயன்படுத்துகிறோம். முதல் நூற்றாண்டில் நடந்த எழுப்புதல் முதல் கடந்த நூற்றாண்டில் சொல்லப்பட்ட எழுப்புதல் வரை எல்லாமே தேவன் தந்ததாகவும் பெருத்த விளைவுகளை ஏற்படுத்தியதாகவும் இருந்தது. ஒட்டுமொத்த உலகத்தின் கவனத்தையும் ஈர்த்தது. நாம், கடைசி கால எழுப்புதலை சந்திக்க இருக்கிறோம். தேவனுடைய உன்னதமான நோக்கத்தை நிறைவேற்ற வர இருக்கின்ற எழுப்புதலை, அது இன்னதென்று அறிந்து அதன் பெரிய படத்தைக் காண்போம் (Big Picture). கருத்துடன் ஜெபிப்போம், எதிர்கொள்ள ஆயத்தமாவோம்.

**எழுப்புதல் என் தேசத்திலே என் கண்கள் காணவேண்டும்...**

**என தேவனிடம் கதறுவோம்... எழுப்புதல் காண்போம்.**

## உங்கள் வீட்டு டி.வி. தேவனுக்குப் பிரியமானதா? சோதித்துப் பாருங்கள்!

1. நீங்கள் குடும்ப அங்கத்தினருடன் நேரம் செலவழிப்பதைக் காட்டிலும் டி.வி. முன்னால் அதிக நேரம் செலவழிக்கிறீர்களா?
2. நீங்களோ அல்லது உங்கள் பிள்ளைகளோ ஒரு நாளில் ஒரு மணி நேரத்திற்கு மேல் டி.வி. பார்க்கிறீர்களா?
3. உங்கள் வீட்டில் எப்பொழுது டி.வி. பார்க்க வேண்டும் என்ற விதிமுறைகள் உண்டா? (உதாரணமாக : பள்ளி செல்லும் முன்னால் பார்க்கக் கூடாது. இரவு 10 மணிக்கு மேல் கூடாது. வீட்டுப் பாடம் முடிக்கும் முன் கூடாது.)
4. உங்கள் குடும்பத்தோடு உள்ள ஐக்கிய நேரம் பறிபோகும் வகையில், சாப்பிடும் நேரங்களில் டி.வி. பார்க்கிறீர்களா?
5. உங்கள் பிள்ளைகள் எந்நெந்த நிகழ்ச்சிகளைப் பார்க்கிறார்கள் என்று கவனிக்கிறீர்களா?
6. உங்களைத் தொந்தரவு செய்வதைத் தவிர்ப்பதற்கு உங்கள் பிள்ளைகள் டி.வி.யில் எதையாவது பார்க்கட்டும் என்று அனுமதிக்கிறீர்களா?
7. உங்கள் பிள்ளைகளோடு டி.வி. நிகழ்ச்சிகளைக் கலந்து ஆலோசிக்கிறீர்களா?
8. உங்கள் வீட்டிற்கு விருந்தினர்கள் வரும்போது அவர்களோடு தரமான நேரம் செலவழிப்பதற்குப் பதிலாக அவர்களோடு சேர்ந்து டி.வி. பார்க்கிறீர்களா?
9. சண்டை, ஆபாசம், அசுத்தம் மற்றும் நல்லொழுக்கமற்ற காரியங்களைப் பார்க்கிறீர்களா?
10. நீங்களோ அல்லது உங்கள் பிள்ளைகளோ ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சிக்கு அடிமைகளாயிருக்கிறீர்களா?

### மதிப்பீடு

- ஒவ்வொரு கேள்விக்கும் ஆம் அல்லது இல்லை என்று உண்மையாகப் பதில் கூறுங்கள்.
- 3,5,7,கேள்விகள் தவிர மற்ற எல்லா கேள்விக்கும் இல்லை என்று பதில் அளித்திருப்பீர்களாகில் உங்கள் பழக்கம் ஆரோக்கியமானது. அப்படி இல்லை யென்றால், நீங்கள் தேவ சமூகத்தில் உட்கார்ந்து மன்னிப்பு கேட்டு உங்கள் பழக்கத்தை மாற்ற வேண்டும். இல்லயேல், பிசாசுக்கு இடம் கொடுக்கிறவர்களாயிருப்பீர்கள் (எபே. 4:27).

## அனுதின கிறிஸ்தவன்

தேவன், நாம் அவரை அனுதினமும் பின்பற்றி அவருடைய வழிகளில் வாழ வேண்டும் என்று விரும்புகிறார். நாம் கீழ்க்கண்ட காரியங்களை அனுதினமும் செய்ய வேண்டும் என்று வேதம் நமக்கு போதிக்கிறது.

1. அனுதின ஜெபம் (அப்போஸ்தலர் 2:42; சங்கீதம் 86:3)
2. அனுதின வேத தியானம் (அப்போஸ்தலர் 2:47; 17:11; சங்கீதம் 1:1-2)
3. அனுதினத் துதி (சங்கீதம் 72:15)
4. அனுதினமும் சுவிசேஷம் அறிவித்தல் (அப்போஸ்தலர் 2:47, 5:42)
5. அனுதினமும் பரிசுத்தம், சுத்திகரிப்பு (எண். 29:6; ரோமர் 12:1)
6. அனுதினமும் சிலுவை சுமத்தல் (லூக்கா 9:23)
7. அனுதினமும் புத்தி சொல்லுதல் (எபிரெயர் 3:13)



## தமிழ் பிரதேச மிஷனரி இயக்கம்

# எனக்கும் அழைப்பு உண்டா ?

Rev. S. எட்வின் ஜெயராஜ்

ரீஜினல் தலைவர், வடகிழக்கு மிஷனரி இயக்கம்

எவரையும் மேன்மைப்படுத்தும் இயேசுவின் நாமத்தினாலே அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொண்ட இயேசுவின் நாமத்தினாலே உங்களுக்கு வாழ்த்துதல்களைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

**அழைப்பைப் பாருங்கள்!**

1 கொரிந்தியர் 1:26-ல் அப்போஸ்தலனாகிய பவுல் "நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்" என்கிறார். தொடர்ந்து பார்ப்பீர்களென்றால் (1:27-31) பெரிய வேலையை நிறைவேற்ற அவரே நமக்கு ஞானத்தைத் தந்து, நீதியைத் தந்து, பரிசுத்தத்தைத் தந்து, மீட்பையும் அருளுகிறார். நாம் செய்ய வேண்டியது தேவனின் வேலை (நெகேமியா 2:8), பெரிய வேலை (நெகேமியா 6:3), நல்ல வேலை (நெகேமியா 2:18). அதைச் செய்ய சபையின் அங்கத்தினனாகிய உன்னை ஊழியனாகிய உன்னையே அவர் தேடுகிறார், எதிர்பார்க்கிறார், அழைக்கிறார். மத்தேயு 6:28-ல் உடுத்துவிக்க வல்லமையுள்ள ஆண்டவர் காட்டுப் புஷ்பத்தைக் கவனித்துப் பார்க்கச் சொன்னார். மத்தேயு 6:26-ல் பிழைப்பூட்ட வல்லமையுள்ள ஆண்டவர் ஆகாயத்துப் பட்சிகளை கவனித்துப் பார்க்கச் சொன்னார். கன்மலையாகிய ஆண்டவர் துன்மார்க்கரோடும், அக்கிரமக்காரரோடும் வாரிக்கொள்ளாத ஆண்டவர். விண்ணப்பங்களின் சத்தத்தைக் கேட்கிற ஆண்டவர் பெலனான, அடைக்கலமான அபிஷேகம் பண்ணினவருக்கு அரணான ஆண்டவர் சங்கீதம் 28:5-ல் அடைக்கலமான அவரது கரத்தின் கிரியைகளையும் செய்கைகளையும் கவனித்துப் பார்க்க எதிர்பார்க்கிறார். அந்த ஆண்டவர் அவரது காரியமாக அனுப்ப திறப்பை அடைக்க கோலியாத்தை எதிர்க்க தம் ஜனங்களுக்கு இரட்சகனாக, இரதமாக குதிரை வீரனாக உன்னை-உங்களை அழைக்கிறார், எதிர்பார்க்கிறார்.

நான் ஒருவன் தானே பெலவீனன்தானே அற்பமாய் எண்ணப்பட்டவன் தானே என்று சொல்லிக்கொண்டே இருக்கிறீர்களா? ஆபிரகாமையும், சாராளையும் பாருங்கள்; அவன் ஒருவனாயிருக்கையில் (ஏசாயா 51:2) தகப்பனாவதை நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், (ரோமர் 4:18) தனக்கு நூறு வயது ஆனபோதும் சாராளுடைய கர்ப்பம் செத்ததாயிருந்தும் (ரோமர் 4:19) தான் போகும் இடம் இன்னதென்று அறியாதிருந்தும் (எபிரெயர் 11:8) ஒரு அடி நிலத்தையாகிலும் அவனுடைய கையாட்சிக்குக் கொடாமலிருக்கையில் (அப்.7:5), வாக்குத்தத்தம் பண்ணினவரை-மரித்தோரிலிருந்து எழுப்ப தேவன் வல்லவராயிருக்கிறாரென் றெண்ணி, தன் சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ளுகிறவனாக ஓடினான். அந்த அழைப்பு-தேவனின் அழைப்பு-கனமான அழைப்பு 1 கொரிந்தியர் 1:26-31ன் படி உனக்கும் அந்த அழைப்பு உண்டு.

## அழைப்பின் அவசியம்!!

எசேக்கியேல் 37-ல் உலர்ந்த எலும்புகள் ஒரு சேனையாக மாற ஒருவர் தேவை; இஸ்ரவேலின் ராணுவங்களின் தேவன் மகிமைப்பட ஒருவர் தேவை; யாக்கோபு 5:20-ன் படி ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து திரளான பாவங்களை மூட ஒருவர் தேவை; மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்கள் ஜீவ ஒளியண்டை வர ஒருவர் தேவை; யோனா 4:11-ல் சொல்லப்பட்ட வலதுகைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் அறியாத ஜனங்கள் இரட்சிக்கப்பட ஒருவர் தேவை; ஏசாயா 6:8-ன் படி யார் நமது காரியமாய் போவார் என்ற வார்த்தைக்கு பதில் கொடுக்க ஒருவர் தேவை; பூமிக்கு உப்பாய் ஒளியாய் கலங்கரை விளக்காய், நடமாடும் நிருபமாய், நற்கந்தமாய் உன் தேவன் உயிரோடிருக்கிறார் என்று நம்பிக்கையூட்ட ஒருவர் தேவை- அது நீதானே – நீங்கள்தானே.

உங்கள் குடும்பம் என்று எடுத்துக்கொள்வீர்கள் என்றால் கணவனாக-தகப்பனாக/மனைவியாக-தாயாக/பிள்ளைகளாக-சகோதர சகோதரிகளாக அழைக்கப்பட்டிருக்கிறீர்கள் - அதை உணர்கிறீர்களா? நிறைவேற்றுகிறீர்களா? திருச்சபை என்றால் அதற்கு தூணும் ஆதாரமுமாக இருக்கிறீர்களா? ஆலயத்தைக் கட்டுகிறவர்களாக ஆரோனையும் ஊரையும் போல மோசேயைத் தாங்குகிறவர் களாக ஆலயத்தில் ஆகாரம் உண்டாகும்படி வட இந்திய ஊழியங்களைத் தாங்கும்படி ஆண்டவர் தன் பலகணிகளைத் திறந்து உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கப் பண்ணும்படி (மல்கியா 3:10) தசமபாகங்களால், காணிக்கைகளால் ஊழியம் செய்கிறீர்களா? உங்கள் அலைச்சல்கள் கர்த்தருடைய கணக்கில் இருக்கிறதா? உங்கள் கண்ணீர் கர்த்தருடைய துருத்தியில் இருக்கிறதா? தேவனுடைய ஊழியத்திற்காய் செலவு பண்ணப்படுகிறீர்களா?

உங்கள் சாட்சி தேவனுடைய நாமத்தைக் கூறும்படி வழியை ஆயத்தப்படுத்துகிறதா? யோவானைப் போல எரிந்து பிரகாசிக்கிற விளக்காய் இருக்கிறீர்களா? அடுத்தவருடைய ஒளியில் ஜெபத்தில் தியாகத்தில் களிகூர மனதாயிருக்கிறீர்களா? ஆயத்தப்பட்டு-ஆயத்தப்படுத்துகிறவர்களாக இருக்கிறீர்களா? ஜெயங் கொள்ளுகிறவர்களாக பொல்லாங்கனைச் ஜெயிக்கிறவர்களாக, கர்த்தரின் கரத்தில் துலக்கப்பட்ட அம்பாக, சாத்தானின் கிரியையை அழிக்கிறவர்களாக, பாவியை தேவனோடு சமாதானம் பண்ணுகிறவர்களாக இருக்கிறீர்களா?

ஆபிரகாமை ஆண்டவர் அழைக்கையில் தேசத்தின் நீளம் அகலம் எம்மட்டோ அம்மட்டும் நடந்து திரி என்று சொன்னார். இன்று அதற்குத் தருணம் இல்லை. ஆனால் ஆதி. 13:14-ல் கண்களை ஏறெடுத்துப் பார் என்றார். இன்று உங்கள் கண்கள் தரிசனத்தோடு ஏறெடுத்துப் பார்க்கிறதா? அவன் கண்கள் ஆசீர்வாதத்தையும் கண்டது- சோதோம் கொமோராவின் புகைச் சூளையையும் கண்டது. நம் தேசத்தை இந்த நாளில் பாருங்கள்-டெல்லி மயானங்களில் பிணங்கள் எரியும் புகை நிறுத்தப்படவில்லை ஏன் மதுரையில் கீரைத்துறை என்று அழைக்கப்படும் மயானம் விரிவுபடுத்தப்படுகிறது. மத்தேயு 24-ஐ அறிந்த நாம் இவைகளெல்லாம் இவ்வளவு சீக்கிரம் சம்பவிக்கும் என்று எதிர்பார்க்கவில்லை-காரிருள் ஜனங்கள் மேல் மரண வாசனை ஜனத்தின் மேல் அஸ்திபாரங்கள் அசைகின்ற காலம்-கோப கலசம் ஊற்றப்பட்ட காலம் ஆதி 18-ல் சொன்னபடி ஆபிரகாமோ பின்னும் கர்த்தருக்கு முன்பாக நின்றுகொண்டிருந்தான். ஆம் அவன்

அழைக்கப்பட்டவன் அழைக்கப்பட தேவை இருந்தது. யோசேப்பு மோசே தாவீது–எஸ்றா–நெகேமியா–எஸ்தர் அழைப்பை அறிந்து இருந்தார்கள். தேவனுக்கும் மனுஷனுக்கும் நடுவில் நின்றார்கள். அழைப்பின் மேன்மை!!!

1 சாமுவேல் 25:28 நாபாலின் மனைவியாகிய அபிகாயில் அழைக்கப்பட்ட தாவீதைப்பார்த்து என் ஆண்டவன் கர்த்தருடைய யுத்தங்களை நடத்துகிறவராமே என்று வாழ்த்துகிறாள். அந்த சூழ்நிலையில் தாவீதுக்கு நிலையான வீடு, வாழ்க்கை எதுவும் இல்லை. 1 சாமுவேல் 25:1. தாவீதுக்கு ஆதரவாக இருந்த சாமுவேல் மரணித்த நிலை – சாமுவேல் 25:3 நாபால் போன்றோர் தலையெடுத்த நிலை. இன்று தேசங்களைப் பார்க்கும்போது இதே போன்ற சூழ்நிலை –மரணங்கள் கொள்ளை நோய் மது அடிமைத்தனம் கொள்ளையிடும் வியாபாரங்கள் – மருந்து குறைபாடு – ஆக்ஸிஜன் குறைபாடு ஆனால் தாவீதும் அவன் மனுஷரும் மக்களுக்கு மிகவும் உபகாரிகளாயிருந்தார்கள் (1 சாமுவேல் 25:15,16). இரவும் பகலும் அத்தேசத்திற்கு மதிலாயிருந்தார்கள். இன்றும் இத்தேவை உண்டு அழைக்கிற ஆண்டவர் உங்களோடு பேசுவராக.

மோசேயைக் கர்த்தர் அழைத்தபோது “நான் எம்மாத்திரம்” (யாத்:3–11) “நான் என்ன சொல்லுவேன்” (யாத்.3:13), “அவர்கள் என்னை நம்பார்கள்” (யாத்.4:1–8), “நான் வாக்கு வல்லவன் அல்ல” (யாத்.4:10) என்று சாக்குப் போக்குச் சொல்லுகிறார். அதற்குக் கர்த்தர்: “நான் உன்னோடே இருப்பேன்” (யாத்.3:12), “இருக்கிறவராக இருக்கிறேன்” (யாத்.3:14), “நீ போ; நான் உன் வாயோடே இருந்து, நீ பேசவேண்டியதை உனக்குப் போதிப்பேன்” என்று தைரியப்படுத்துகிறார் (யாத்.4:12). கிதியோனைப் பார்த்து “உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா” என்றார் (நியா.6:14). பலவீனமான பவுல் என்னை பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்வேன் என்றாரே. 1கொரி.1:31–ன் படி அவரே நமக்கு நீதியும் பரிசுத்தமும் மீட்பும் ஞானமும் ஏன் பெலனும் அரணும், தலையை உயர்த்துகிறவரும், சமயத்திற்கு ஏற்ற வார்த்தைகளை தருகிறவரும், அவராலே ஒரு சேனைக்குள் பாய, மதிலைத் தாண்ட, வெண்கல வில்லும் உன் புயங்களால் வளையும்படி செய்கிறவராயிருக்கிறார்.

## அழைப்பை நிறைவேற்றுங்கள்!!

இறுதியாக அவரது அழைப்பை நிறைவேற்றுங்கள் (லூக்.16:19–31). ஐசுவரியவான் லாசரு சம்பவத்தில் பாதாளத்தில் வேதனைப்பட்ட ஐசுவரியவான், “எனக்கு ஐந்துபேர் சகோதரருண்டு. அவர்களும் வேதனையுள்ள இந்த இடத்துக்கு வராதபடி, இந்த லாசருவை அனுப்பும்” என்று கேட்டான். அதற்கு பதில் என்ன தெரியுமா? அவர்கள் உள்ள அப்பகுதியில், அக்காலத்தில் அவர்களை சந்திக்க தேவன் வைத்திருந்த யாரோ ஒரு மோசே. ஒரு தீர்க்கதரிசி உண்டு என்ற பதிலே. இவ்வார்த்தையை விசுவாசிக்கிற அருமையான திருச்சபை விசுவாசியே, ஊழியரே, ஊழியத்தலைவரே, நீர் தான் இந்த தேசத்திற்கு இந்தக் காலத்திற்கு இந்த சூழ்நிலைக்கு தேவன் அழைக்கிற பாத்திரம்.

உங்கள் குடும்பத்தைச் சந்திக்க யாரோ ஒருவரையல்ல – உங்கள் சபையை வளரச்செய்ய யாரோ ஒருவரையல்ல–நம் தேசத்தை சந்திக்க யாரோ ஒருவரையல்ல–உன்னை அழைத்திருக்கிறார். நீங்கள் பாடாவிட்டால் கற்கள் பாடலாம். ஆனால் ஆண்டவர் உங்களை அவ்விடத்தை நிரப்பச்சொல்கிறார். உங்களைச்சுற்றி

அரிக்கட்டுகள் உண்டு. உங்களைச்சுற்றி நட்சத்திரங்கள் உண்டு. "Always God's method is man" - நீங்களே ஆண்டவருக்குத் தேவை. வயல் நிலங்கள் ஆயத்தம்–அறுவடைக்கு எஜமானர் உங்களை எதிர்நோக்கி இருக்கிறார்–நாம் நடுவோம்! நாம் நீர்ப் பாய்ச்சுவோம் ! நம் ஆகாரத்தை தேசத்தின் மேல் விதைப்போம்! இலவசமாய்ப் பெற்றதை தியாகமாய் விதைப்போம்! திறப்பை அடைப்போம்! ஆண்டவரை சந்திப்போம். தேசத்தை சந்திப்போம். விரைவில்–அழைக்கப்பட்டோர் அநேகர் அல்லவா

அழைத்தவர் நம் ஆண்டவர் அல்லவா

அனுப்புகிறவர் நம் ஆண்டவர் அல்லவா

ஆண்டவர் உன்னை இக்காலத்தில் இப்பகுதியில் ஊழியனாக, தீர்க்கனாக, சிற்பியாக வைத்திருக்கிறார். வெறும் கையனாக அல்ல–ஆத்துமாக்களோடு ஆண்டவரை சந்திக்க நம்மை அழைத்த ஆண்டவர் கிருபை தருவாராக – ஆமென்

அழைத்தீரே ஏசுவே

அன்போடே என்னை அழைத்தீரே.

ஆண்டவர் சேவையிலே மகிழ்வேனே (மரிப்பேனே)

ஆயத்தமானேன் தேவா

---

## ஜெபியுங்கள்! ஜெபியுங்கள்!! ஜெபியுங்கள் !!!

1. நாம் தாங்கும் மிஷனரிகள், அவர்களின் குடும்பம் மற்றும் ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.
2. கொள்ளைநோய் தேசத்தை தாக்கியிருக்கும் இந்த சூழ்நிலைமையில் மிஷனரிகள், அவர்கள் குடும்பங்கள் பாதுகாக்கப்பட ஜெபியுங்கள்.
3. கொள்ளை நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிற மிஷனரிகளின் குடும்பங்கள் குணமாக்கப்பட ஜெபியுங்கள்.
4. மிஷனரிகளை ஜெபத்தினாலும், பணத்தினாலும் தாங்கும் நமது சபை விசுவாச குடும்பங்களின் நலனுக்காக, இன்னும் அநேகரை தேவன் எழுப்பித்தரவும் ஜெபியுங்கள்.
5. நமது வடகிழக்கு பிராத்தியத்திற்குட்பட்ட 15 மாநிலங்களுக்காக ஜெபியுங்கள்.
6. நமது சபைகளிலிருந்து அழைப்பு பெற்ற அநேகர் மிஷனரிகளாய் புறப்பட்டுச் சென்று தேவராஜ்யம் கட்ட ஜெபியுங்கள்.
7. இந்தியா முழுவதும் சுவிசேஷம் செல்லும்படியான வாசல் அடைபடாதபடி கர்த்தர் பாதுகாக்க, கிறிஸ்தவ எதிர்ப்பு மறைந்து தேசம் முழுவதும் மாபெரும் எழுப்புதல் உண்டாக ஜெபியுங்கள்.
8. மிஷன் பணித்தளங்களில் சபைக்கென்று இடங்கள் வாங்க, சபைகள் கட்ட பணத்தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.
9. மிஷன் இயக்கத் தலைவர்களுக்காக ஜெபியுங்கள்.



# எப்படி தீர்மானம் எடுக்கக்கூடாது?

## How Not To Make Decision


**Rev. R. நெல்சன் ஞானகுமார்**

இயக்குநர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியங்கள்.
மூத்த போதகர், திருவண்ணாமலை ஏ.ஜி. சர்ச்.


மனுஷனுடைய மதியீனம் அவன் வழியைத் தாறுமாறாக்கும்; என்றாலும் அவன் மனம் கர்த்தருக்கு விரோதமாய்த் தாங்கலடையும் (நீதிமொழிகள் 19:3).

ஒவ்வொரு நாளும் நாம் எதை தீர்மானிக்கிறோமோ, அதைத் தான் நாம் செய்கிறோம். நாம் எதைச் செய்கிறோமோ, அதன் விளைவைத் தான் அனுபவிக்கிறோம். ஆகவே நாம் தீர்மானம் எடுக்கும்போது கவனமாயிருக்க வேண்டும். சில நேரங்களில் சொற்ப மதியீனத்தால், சில தவறான தீர்மானங்களை எடுத்து வாழ்நாள் முழுவதும் அதன் தீங்கை அனுபவிக்கிறார்கள். எனவே 'எப்படி தீர்மானம் எடுக்கக்கூடாது' என்ற இந்த செய்தி உங்களுக்கு மிகவும் பிரயோஜனமாக இருக்கும். தொடர்ந்து படியுங்கள்.

**1. உடனடியாக கிடைக்கிற சந்தோஷத்திற்காக தீர்மானம் எடுக்கக்கூடாது** (பிரசங்கி 7:8).

ஒரு தீர்மானம் எடுக்கும்போது உடனே என்ன கிடைக்கும் என்பதைவிட, அதனுடைய பின் விளைவுகள் என்னவாயிருக்கும் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

**உதாரணம்......**

❖ **லோத்து** - (ஆதியாகமம் 13:10,11) - நீர்வளம் பொருந்திய இடத்தை பார்த்தவுடன் அதை தெரிந்துகொண்டான். ஆனால் அதனாலுண்டான கீழ்க்கண்ட பின் விளைவுகளை சிந்திக்காமற்போனான்.

- யுத்தம் வந்தது (14:11), நாடு கடத்தப்பட்டான் (14:12).
- இருதயத்தில் வாதிக்கப்பட்டான் (2 பேதுரு 2:7,8).
- சேர்த்து வைத்த எல்லாவற்றையும் விட்டு விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது (19:15,16,24,25), மனைவி இறந்து போனாள் (19:17,26) .
- தகாத உறவு (19:32,33)

❖ **ஏசா** (எபிரெயர் 11:16).

**2. அவசரப்பட்டு தீர்மானம் எடுக்கக் கூடாது** (நீதிமொழிகள் 19:2)

சிலர் தவறான தீர்மானங்களை எடுத்துவிட்டு, பின் பல கஷ்டங்களுக்கு உள்ளாவார்கள். இதனால் காலமெல்லாம் எடுத்த தவறான தீர்மானத்தை எண்ணி நொந்துகொண்டேயிருப்பார்கள். மனம் பதறி அவசரப்பட்டு செய்யும்போது, தவறு நடக்க வாய்ப்பிருக்கிறது. எனவே போதுமான கால அவகாசம் எடுத்துக்கொள்ளுங்கள்.

**உதாரணம்......**

❖ சவுல் (1 சாமுவேல் 13:8,9) - இன்னும் சற்று பொறுத்திருப்பானேயானால், சாமுவேல் வந்திருப்பார். பலி செலுத்தியிருப்பார். சவுலை ஆசீர்வதித்திருப்பார். ஆனால் சவுலோ மக்களை திருப்திப்படுத்துவதற்காக அவசரப்பட்டு பலி செலுத்திவிட்டான். இதனால் அவனுடைய ராஜாங்கத்தையே இழக்க வேண்டியதாயிற்று. முடிவில் தற்கொலை பண்ணிக்கொண்டான்.

❖ இஸ்ரவேல் ஜனங்கள் (யாத்திராகமம் 32:1,28)

**3. அதிக தாமதமாகவும் தீர்மானிக்க கூடாது** (1 இராஜா. 22:5)

சரியான நேரத்தில் எடுக்கும் சரியான தீர்மானமே வெற்றியைக் கொண்டுவரும். காலம் கடந்த பிற்பாடு தீர்மானம் எடுப்பதும் பிரயோஜனமற்று போய்விடும்.

❖ **புத்தியில்லாத கன்னிகைகள்:** (மத்தேயு 25:8,9) மணவாளன் வந்த பிற்பாடு எண்ணெய் வாங்க தீர்மானித்தார்கள். கதவு அடைக்கப்பட்டது. கைவிடப்பட்டார்கள். முன் கூட்டியே தீர்மானித்திருந்தால், எண்ணெய் ஏற்பாடு செய்திருக்கலாம்.

❖ **யூதாஸ் காரியோத் -** மத்தேயு 27:3

**4. உணர்ச்சிவசத்தில் தீர்மானிக்கக்கூடாது -** (நீதிமொழிகள் 21:5)

கோபம், கவலை, பயம், அதிக சந்தோஷம் போன்ற உணர்ச்சி மேலோங்கியிருக்கும்போது, தவறான தீர்மானம் எடுத்துவிட வாய்ப்பிருக்கிறது. அதாவது உணர்ச்சிகளே நம்மை நடத்துகிறதாக இருக்கிறது. இந்த நேரத்தில் புத்தி வேலை செய்யாது. பின் வருத்தப்படுவோம்.

**உதாரணம்.....**

❖ **சிறைச்சாலைக்காரன்:** கைதிகள் ஓடிவிட்டார்களோ என்று நினைத்து, என்னவாகுமோ என்று மனம் பதறி, தற்கொலை செய்து கொள்ளப்பார்த்தான். ஆனால் உண்மையில் பவுலும் சீலாவும் தப்பித்து ஓடவில்லை.

❖ **யெப்தா:** (நியாயாதிபதிகள் 11:30,31)

**5. கலந்தாலோசிக்காமல் தீர்மானம் எடுகக்கக் கூடாது** (நீதிமொழிகள் 15:22; 18:2; 11:14)

சில நேரங்களில், நாம் எடுக்கும் தீர்மானங்களில் இருக்கும் தவறுகள் நமக்கு தெரியாமல் போய்விட வாய்ப்பிருக்கிறது. எனவே நம்மை நேசிக்கிற, நம்மேல் அக்கறையுள்ள ஒரு சிலரிடமாவது, கலந்தாலோசிக்க வேண்டும். அப்பொழுது நம் கண்களுக்கு மறைவாயிருக்கிற தவறுகள் பிறர் மூலமாக சுட்டிக்காட்டப்பட வாய்ப்பிருக்கிறது. தேவைக்கதிகமாக கலந்தாலோசிப்பதும், தவறான நபர்களிடம் கலந்தாலோசிப்பதும், யாரிடமும் கலந்தாலோசிக்காமலிருப்பதும் தவறு.

**உதாரணம்....**

❖ **அப்சலோம்** : (2 சாமுவேல் 17:7,14) தவறான தீர்மானம் எடுத்ததினால் விளைவு என்ன? ஒரு மனுஷன் எடுத்த தவறான தீர்மானம் 20,000 பேர் யுத்தத்தில் சாக காரணமாக மாறிற்று.

❖ **ரெகொபெயாம்** (1 இராஜாக்கள் 12:13)

**6. மனிதர்களை பிரியப்படுத்த தீர்மானம் எடுக்கக்கூடாது**

ஒரு தவறான தீர்மானம் எடுப்பதினால், ஒருவேளை சில மனிதர்களை சந்தோஷப்படுத்திவிடலாம். ஆனால் நீங்கள் எடுத்த தவறான தீர்மானத்தின் தீமையான விளைவுகளை சந்திக்கும்போது, அவர்கள் உங்கள் கூட இருக்க மாட்டார்கள்.

**உதாரணம்......**

❖ பிலாத்து (மத்தேயு 27:26) யூதர்களை பிரியப்படுத்த, இயேசுவை சிலுவையிலறைய சம்மதித்தான்.

❖ பேலிக்ஸ்: (அப்போஸ்தலர் 24:27)

**7. வேத வசனத்திற்கு முரணாக தீர்மானம் எடுக்கக்கூடாது**

தேவ வசனமே தேவ சித்தம். தேவ வசனத்திற்கு எதிராக சொப்பனமோ, தீர்க்கதரிசனமோ, தரிசனமோ... வந்தாலும் அது தவறுதான்.

உதாரணம்....

❖ ***ஊசா*** (1 நாளாகமம் 13:7,10; 15:2,13) தேவனுடைய பெட்டியைத் தூக்குவதற்கு, ஆண்டவர் குறித்திருக்கிற நியதியை விட்டுவிட்டு ரதத்தின் மேல் கொண்டு வந்தார்கள். இதன் விளைவாக உயிரே போயிற்று.

❖ **நகோமி** (ரூத் 1:2; உபாகமம் 23:3).



# தமிழ்பிரதேச மத்திய வாலிபர் ஊழியம்

**Rev. D. சாலமோன்**

President, Christ Ambassadors

## BE FAITHFUL - உண்மையாயிரு

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அற்புத நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

கடந்த இதழில் வாலிபர்கள் குறித்தும், வாலிப ஊழியமும் அதன் முக்கியத்துவம் பற்றிய அறிமுகத்தின் தொடர்ச்சியாக இந்த இதழில் வாலிபர்களுக்கு வாலிபர் தங்களுக்கு உண்மையாக இருக்க அவர்களுக்கு உதவுதல் என்ற தலைப்பில் இப்பகுதியில் தொடருவோம். Help them to be faithful for themselves. பரிசுத்த வேதாகமத்திலே தகப்பனின் குரல் 1தீமோ.1:18–ல்குமாரனாகிய தீமோத்தேயுவே, "நீ விசுவாசமும் நல்மனச்சாட்சியும் உடையவனாயிரு." Timothy, my son, Cling to your faith in Christ, and keep your conscience clear என்று தொனிக்கிறது.

விசுவாசத்தை குறித்த நல்மனசாட்சி என்பது ஒருவரின் செயல் நல்லதா அல்லது கெட்டதா என்பதைத் தனக்கு உணர்த்தும் மனநிலையாகும். தேவன் என்னை எந்த நபராக இருக்க உண்டாக்கினாரோ அந்த நபராக இருப்பது தான் தனக்கு உண்மையாக இருப்பதாகும். நம்முடைய தேவன் உண்மையுள்ளவர், அவர் நம்மிடமும் உண்மையை எதிர்பார்க்கிறார். எவைகளில் உண்மையாய் இருக்க வேண்டும் என்பதையும் அப்படி உண்மையாய் இருந்ததன் அறிகுறி களை குறித்து வாலிபர்களுக்கு உணர்த்துவதும்,போதிப்பது அவசியமாகும்.

**Essential to "BE FAITHFUL" this includes faithful to their strength, weakness and emotions.**

### 1.Being faithful to your strength-தன் பெலத்திற்கு உண்மையாய் இருக்க வேண்டும்.

மனிதனாய் பிறந்த ஒவ்வொருவருக்கும் தேவன் கிருபைகளையும் தாலந்துகளையும் திரளாய் கொடுத்திருக்கிறார். கிறிஸ்துவுக்குள் வாழ்வானது இந்த சமுதாயத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

(God has given us strength to change the world) அவைகளை உணர்ந்து வாழ்வின் நோக்கத்தை நோக்கி பயணித்தவர்கள் சாதித்தவர்களாகவும் சாதிக்கிறவர்களாகவும் இருக்கின்றனர். தாவீது வாலிபனாய் இருந்தபோது பாடுவது, கவன் எறிவது, மந்தையை காப்பது, இசை வாசிப்பது, சங்கீதங்கள் எழுதுவது, யுத்தம் செய்வது போன்ற தன் பெலனான காரியங்களில் மிக உறுதியாய் இருந்தார். தாவீதுக்கு கொடுக்கப்பட்ட மந்தை மேய்க்கும் வேலையே செய்து முடிக்க நேரம் போதாத நிலையில் தன்னுடைய மற்ற திறமைகளை வளர்த்துக்கொள்ள ஆர்வம் காட்டினார்.

### எதினால் அறியலாம்

ஒருவர் தன் பெலத்தில் உண்மையாய் இருக்கிறார் என்பதை எதினால் அறியலாம்? அதாவது தனக்கு கிடைக்கும் எந்த ஒரு வாய்ப்பையும் தவறவிடமாட்டார். கோலியாத்தை சந்தித்த தாவீது தேவ நாம மகிமைக்கென்று செயல்பட்டதை 1 சாமுவேல் 17:46 வசனத்தில் வாசிக்கிறோம். கொலோ.3:17 வசனத்தின்படி எதை செய்தாலும் முழுபெலத்தோடும் நேர்த்தியாக தேவ நாம மகிமைகென்று செயல்படுவதின் மூலம் ஒருவர் தன் பெலத்தில் உண்மையாய் இருக்கிறார் என்பதை அறியலாம்.

### 2.Being faithful to your weakness-தன் பெலவீனத்தை குறித்து உண்மையாய் இருக்க வேண்டும்.

ஒவ்வொருவரும் பெலமானவைகளை ஏற்றுக்கொள்வது போல பெலவீனமானவைகளை ஒத்துகொள்ள வேண்டும். தேவன் மனிதனை பூரணமாகவே படைத்தார். அவரவரின் தெரிந்தெடுப்புகள் தீர்மானங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பெலம் பெலவீனமாகவும், பெலவீனம் பெலமாகவும் மாறுகிறது. வாழ்வில் பெலவீனங்களை குறித்த அஜாக்கிரதைகளாலும், தன்னை சரிப்படுத்திக்கொள்ள கிடைத்த தருணங்களை தவறவிட்டதாலும் வாழ்வில் பெலவீனங்கள் தொடர்கிறது.

அவ்வாறு பெலவீனங்கள் சமயம் பெற்று சோதனையாக எழும்பும் பட்சத்தில் அதை தேவனிடம் மறைக்காமல் சொல்லி உதவி கேட்க வேண்டும். 2 கொரி.12:8,9 பவுல் தன் பெலவீனங்களை குறித்து அறிந்து அதை கர்த்தரிடம் வெளிப்படுத்தி ஜெபத்தின் மூலம் உதவி நாடுகிறார். ஒருவருக்கு பெலமாக கருதப்பட்ட ராணுவ உடை, பட்டயம் ஆகியவை தன் பெலன் அல்ல என்று தாவீது நன்கு அறிந்ததினால் தேவனிடம் தான் கற்றுக்கொண்ட தனக்கே உரிய பாணியான கவனோடும் கல்லோடும் சென்று வெற்றி பெற்றார்.

### எதினால் அறியலாம்?

ஒருவர் தன் பெலவீனத்தில் உண்மையாய் இருக்கிறார் என்றால் அவர் ஆண்டவரிடம் நம்பத்தகுந்த வாழ்வின் ஆலோசகரிடம் உதவி கேட்க தயங்க மாட்டார். தேடுங்கள் தட்டுங்கள் கண்டடைவீர்கள்!

### 3.Being faithful to your emotion - தன் உணர்வுகளை குறித்து உண்மையாய் இருக்க வேண்டும்.

தேவன் ஒவ்வொரு மனிதனையும் உணர்வுமிக்கவனாய் படைத்துள்ளார். இதை எளிதில் புரிந்துகொள்ள smileys, emojies போன்றவை பயன்படுத்தப்படுகிறது. அவற்றின் மூலம் மனம் உணர்வதை வெளிப்படுத்தப் பயன்படுகிறது.

“என் இருதயம் நல்ல விசேஷத்தினால் பொங்குகிறது” (சங்.45:1)

‘என் மாம்சமானது உம்மை வாஞ்சிக்கிறது’ சங்.63:1 போன்ற வசனங்களில் தாவீது தன் மனதின் உணர்வுகளுக்கு வார்த்தை வடிவம் கொடுப்பதை காணலாம். David verbalising his thoughts.

ஒருவர் தன் உணர்வுகளுக்கு உண்மையாய் இருக்கிறார் என்பதை, அவர் தன்னை தான் நேசிப்பதின் மூலம் அறிந்து கொள்ளலாம். உன்னிடத்தில் நீ அன்புகூறுவது போல பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக என்ற ராஜரீக பிரமாணம் சொல்வது போல தன்னிடத்தில் அன்பு கூறவேண்டும் என ஆண்டவர் விரும்புகிறார். ஒருவர் தன்னிடத்தில் அன்பு கூருகிறவராக இருப்பாரானால்

தேவனோடு உள்ள ஐக்கியம்-Spiritual

தன் சரீர ஆரோக்கியம்-Physical (உணவு,தூக்கம்,பழக்கவழக்கங்கள்)

சமூக வாழ்க்கை-Social (behaviour and manners)

அறிவுதிறன் மேம்பாடு intellectual ஆகிய தன் வாழ்வின் முன்னுரிமைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பார்.

ஆகவே வாலிபர்கள் தங்கள் பெலனுக்கும், பெலவீனங்களுக்கும், உணர்ச்சிகளுக்கும் உண்மையாய் இருக்க போதித்து அவர்கள் சந்தோஷத்திற்கு சகாயாரய் இருக்க தேவன் உதவி செய்வாராக!

தீமோத்தேயுவே... நீ விசுவாசமும் நல்மனச்சாட்சியும் உடையவனாயிரு!

---

## பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்

குறிப்பு:- காசோலை / டிராப்ட் எடுக்கும்போது **Tamil District Council of SIAG** என்று எடுத்து பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு அனுப்பவும்.

மணியாடர் அனுப்புவதை தவிர்க்கவும்.
பத்திரிக்கை ஊழியத்திற்கு மணியாடர் மூலம் தான் அனுப்ப முடியும் என்ற நிலையில் உள்ளவர்கள் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

**ஏ.ஜி. தலைமை அலுவலகம்**

**30, நாவலர் நகர், மதுரை - 625 016. போன் : 0452 2301165.**

## ஜெபியுங்கள் ! ஜெபியுங்கள் !

கடந்த மாதங்களில் கொரானா தொற்றினால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த நமது தமிழ் பிரதேச ஊழியர்களின் குடும்பங்களுக்காகவும் திருச்சபை விசுவாசிகளுக்காகவும் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

கர்த்தர்தாமே அனைவருக்கும் தேவ பெலனையும் ஆறுதலையும் தருவாராக!



## தேவனுடைய நாமங்கள் மூலம் அவரை அறிந்துகொள்ளுங்கள்

| | | |
|---|---|---|
| யேகோவா ஏலோகீம் | ஆதி. 2:4 | சிருஷ்டி கர்த்தர் |
| யோகோவா ஏல் எலியோன் | ஆதி.14:22 | உன்னதமான தேவனாகிய கர்த்தர் |
| யோகோவா அடோனாய் | ஆதி.15:2 | கர்த்தராகிய ஆண்டவர் |
| யோகோவா ஏல் ஓலாம் | ஆதி.21:33 | சதாகாலமுள்ள தேவனாகிய கர்த்தர் |
| யோகோவா யீரே | ஆதி.22:14 | தேவைகளை சந்திக்கும் கர்த்தர் |
| யோகோவா ராஃபா | யாத்.15:26 | பரிகாரியாகிய கர்த்தர் |
| யோகோவா நிசி | யாத்.17:15 | வெற்றிதரும் கர்த்தர் |
| யோகோவா மெக்காதேஷ் | யாத்.31:13 | பரிசுத்தமாக்கும் கர்த்தர் |
| யோகோவா ஷாலோம் | நியா.6:24 | சமாதான கர்த்தர் |
| யோகோவா ஷாபாத் | நியா.11:27 | நியாயம் செய்யும் கர்த்தர் |
| யோகோவா சபயோத் | 1 சாமு.1:13 | சேனைகளின் கர்த்தர் |
| யோகோவா சிட்கேனு | எரே. 23:6 | நீதியுள்ள கர்த்தர் |
| யோகோவா ரூபா | சங்.23:1 | மேய்ப்பராகிய கர்த்தர் |
| யோகோவா ஒசேனு | சங்.95:6 | உண்டாக்கின கர்த்தர் |
| யோகோவா கிப்போர் | ஏசா. 42:13 | பராக்கிரமமுள்ள கர்த்தர் |
| யோகோவா ஷம்மா | எசே.48:13 | இருக்கும் கர்த்தர் |
| ஏல் ஓலாம் | ஆதி.21:33 | சதாகாலமுள்ள தேவன் |
| ஏல் டிப்பில்லா | சங். 66:20 | ஜெபம் கேட்கும் தேவன் |
| ஏல் ரோயீ | ஆதி. 16:13 | காண்கின்ற தேவன் |
| ஏல் ஆமென் | ஏசா. 65:16 | சத்திய தேவன் |
| ஏல் நாசா | சங். 99:8 | மன்னிக்கும் தேவன் |
| ஏல் காரோப் | எரே. 23:23 | சமீபமான தேவன் |
| ஏல் ஷடாய் | ஆதி. 17:1 | சர்வ வல்லமையுள்ள தேவன் |
| எபினேசர் | 1 சாமு.7:12 | இம்மட்டும் உதவின தேவன் |
| இம்மானுவேல் | மத். 1:23 | தேவன் நம்மோடிருக்கிறார் |



சிறுவர் பகுதி

# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ


## பாஸ்டர். பெவிஸ்டன்

பரமன்குறிச்சி, நாசரேத் மண்டலம்


ஹாய் குட்டீஸ்.. எல்லாரும் எப்படி இருக்கிறீங்க.. புதிய கல்வியாண்டுக்குள்ள அடியெடுத்து வைக்கும் காலத்தில் இப்படி முடங்கி போய் கிடக்குறோமேனு ரொம்ப கவலைப்படுகிறீங்களா? கவலைப்படாதிருங்க. சீக்கிரத்தில் இந்த நிலை மாறும். வீட்டில் இருக்கும் இந்த நாட்களை பிரயோஜனப்படுத்தி நல்லா பைபிள் வாசிங்க.. இன்றைக்கு அது குறித்துதான் சூப்பரான ஒரு கதை சொல்ல போறேன். கவனமா கேட்குறீங்களா..?

ஒரு வயதான முதியவர், தன் மகன், மருமகள் மற்றும் பேர பிள்ளையோடும் வாழ்ந்து வந்தார். தினமும் காலையில் அவர் எழுந்து வேதாகமத்தை வாசிப்பது வழக்கம். அவருடைய பேரன் அவர் செய்வதுப் போல அவனும் தன் வேதாகமத்தை எடுத்து வாசிக்க முயற்சி செய்வது வழக்கமாக இருந்தது. ஒரு நாள் பேரன் தன் தாத்தாவிடம், 'தாத்தா நீங்கள் செய்வதுபோல நானும் வேதத்தை எடுத்து வாசித்துப் பார்க்கிறேன். ஆனால் எனக்கு அதில் ஒன்றும் புரியவில்லையே? அதுவும் நான் வேதத்தை மூடியவுடன் என்ன படித்தோம் என்பதையே மறந்து போகிறேனே. ஆகையால், வேதத்தை வாசிப்பதால் என்ன பயன்? ' என்று கேட்டான்.

அப்போது அவனுடைய தாத்தா, தன் அருகில் இருந்த கரிகள் நிறைந்த கூடையிலிருந்து கரியை அனல் மூட்டும்படியாக அடுப்பில் போட்டு விட்டு, வெறும் கூடையை அவனுடைய கையில் கொடுத்து, 'நீ அருகில் உள்ள ஆற்றில் இருந்து தண்ணீரை இந்த கூடை நிறைய எடுத்துக்கொண்டு வா' என்று அனுப்பினார். அதன்படி பேரன் அந்த கூடையை எடுத்துக்கொண்டு ஆற்றுக்குப் போய் தண்ணீர் கொண்டு வரும்போது, அவன் வீட்டிற்கு வருவதற்குள் தண்ணீர் எல்லாம் சிந்திவிட்டிருந்தது. தாத்தா அதை பார்த்து சிரித்தபடி, 'நீ இன்னும் கொஞ்சம் வேகமாக வரவேண்டியதாக்கும்' என்று கூறி, மீண்டும் அவனை தண்ணீர் கொண்டு வரும்படி சொன்னார். பேரன் திரும்பவும் வேகமாய் ஓடி, தண்ணீர் கொண்டு வந்தாலும், அவன் வீடு வருவதற்குள் அதிலிருந்து தண்ணீர் ஒழுகியிருந்தது. அதைப் பார்த்து பேரன், 'இந்த கூடையில் தண்ணீர் கொண்டு வருவது மிகவும் கஷ்டம், நான் ஒரு பக்கெட்டில் கொண்டு வருகிறேன்' என்றான். தாத்தா, 'எனக்கு பக்கெட்டில் தண்ணீர் கொண்டு வர வேண்டாம், எனக்கு இந்த கூடையில்தான் தண்ணீர் வேண்டும்' என்று கூறினார். பேரன் மீண்டும் தண்ணீர் எடுத்து வரப்போனான். தாத்தா வெளியே நின்று அவன் போவதை பார்த்துக் கொண்டிருந்தார். பேரன் தன் தாத்தாவிற்கு முன்பாக வேகமாக ஓடி, தண்ணீரை மொண்டு வீட்டிற்கு ஓடி வருவதற்குள் தண்ணீர் எல்லாம் ஒழுகிப்போனதைக் கண்டு, தன் தாத்தாவிடம், 'பார்த்தீர்களா? நான் எத்தனை வேகத்துடன் போய் தண்ணீர் கொண்டு வந்தேன், ஆனால் எல்லாம் வீண், நான் வருவதற்குள் ஒழுகிப்போய் விடுகிறது என்று கூறினான்.

தாத்தா அவனை பார்த்து, 'நீ நினைக்கிறாயா! இப்படி நீ கொண்டு வந்தது வீண் என்று? இந்தக் கூடையைப் பார்' என்றார். அப்போதுதான் அந்த பேரன் அந்தக் கூடையைப் பார்த்தான். அழுக்கு நிறைந்திருந்த, கரிகளால் கறுப்பாயிருந்த அந்தக்

கூடை இப்போது பளீரென்று அதன் உட்புறமும் வெளிப்புறமும் சுத்தமாகி இருந்தது. தாத்தா சொன்னார், 'இதைப்போலத்தான் நீ வேதம் வாசிக்கும்போது, ஒன்றும் புரியாமலிருக்கலாம், அல்லது மறந்துப் போகலாம், ஆனால் நீ வாசிக்க வாசிக்க அது உன்னை உட்புறத்திலும், வெளிப்புறத்திலும் சுத்தமாக்குகிறது. ஏனென்றால் பரிசுத்த வார்த்தைகள் ஒவ்வொன்றும் புடமிடப்பட்ட, ஜீவனுள்ள வார்த்தைகள், ஆகையால் நீ தொடர்ந்து வேதத்தை தினமும் வாசி' என்றுக் கூறினார்.

அன்பு தம்பி தங்கச்சி... தேவனுடைய வார்த்தைகள் ஜீவனுள்ளது. அது இன்றும் ஒவ்வொருவருடனும் இடைபடுகிறது, பேசுகிறது, கண்டித்து உணர்த்துகிறது, ஆசீர்வதிக்கிறது, ஆறுதல்படுத்துகிறது. அப்படிப்பட்ட அற்புதமான இந்த வேத புத்தகம் இன்று நம் தாய் மொழியில் நமக்கு கிடைத்திருப்பது பாக்கியமே! ஆகவே இந்த அன்பின் வேதபுத்தகத்தை நமக்கு தேவன் தந்திருக்கிறபடியினால் தேவனை ஸ்தோத்தரிப்போம். ஒவ்வொரு நாளும் வாசிப்போம், நமது மனமும் குணமும் சுத்தமாவது உறுதி.

மனன வசனம்: "வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக் கொள்ளுகிறதினால்தானே" (சங்.119:9).

இந்த மாத சிறுவர் பகுதி நிச்சயம் உங்களுக்கு பிரயோஜனமாக இருந்திருக்கும் என நம்புகிறேன். உங்கள் கருத்துக்களை தீர்மானங்களை 97503 81784 என்ற எண்ணிற்கு குறுஞ்செய்தியாக அனுப்பி வைக்க மறவாதிருங்கள். அடுத்த இதழில் வேறொரு சுவாரசியமான கதையோடு உங்களை மறுபடியும் சந்திக்கிறேன். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

---



# கர்த்தருடைய போதனையை வாஞ்சிப்போம்

**Rev. V.J. பாலஸ்**

தலைமைப் போதகர், சிமிர்னா A.G. சபை, வண்ணாரப்பேட்டை

"மெய்யாகவே அவர் ஜனங்களைச் சிநேகிக்கிறார்; அவருடைய பரிசுத்தவான்கள் எல்லாரும் உம்முடைய கையில் இருக்கிறார்கள்; அவர்கள் உம்முடைய பாதத்தில் விழுந்து, உம்முடைய வார்த்தைகளினால் போதனையடைவார்கள்" (உபாகமம் 33:3).

மோசே கடைசியாக இஸ்ரவேல் ஜனங்களுக்குச் சொன்ன ஆசீர்வாதங்கள் 33-ஆம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். கடைசியாக மோசே சொன்ன வார்த்தைகள் மிகவும் முக்கியம். மெய்யாகவே கர்த்தர் நம்மை சிநேகிக்கிறார். இதை அறியாத இஸ்ரவேல் ஜனங்கள் குறைகூறினார்கள், பின்வாங்கினார்கள், முறுமுறுத்தார்கள், பரீட்சை பார்த்தார்கள், எதிர்த்து நின்றார்கள், விக்கிரகாராதனை செய்தார்கள்.

**அவருடைய பரிசுத்தவான்கள் அவருடைய கையிலே இருக்கிறார்கள் :** அவருடைய பலத்த கைக்குள் அடங்கி இருந்தால் ஏற்றகாலத்தில் அவர் நம்மை உயர்த்துவார். அவருடைய கையிலே இருந்தால் நமக்கு பாதுகாப்பு இருக்கும், சந்தோஷம், சமாதானம் இருக்கும்.

**அவர்கள் பாதத்தில் விழுந்து அவருடைய வார்த்தைகளினால் போதனையடைவார்கள்:** சரியான போதனை நமக்கு கிடைக்குமானால் நாம்

ஆசீர்வதிக்கப்படுவோம். இன்றைக்கு ஜனங்கள் சரியான போதனை கிடைக்காமல் கண்ணிகளிலும் சாத்தானுடைய கள்ள உபதேசங்களிலும் சிக்கி வேதனைப் படுகிறார்கள்,

பலவிதமான அந்நிய போதனைகளால் அலைப்புண்டு திரியாதிருங்கள்... (எபிரெயர் 13:9).

நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார் (எபேசியர் 4:14 ,15).

பலவிதமான போதனைகளை கேட்பதனால் விசுவாசிகளில் அநேகர் ஆரோக்கியமில்லாமல் இருக்கின்றனர். நாம் சுவிசேஷகூட்டங்களை தேடி அலையாமல் அவருடைய பாதத்தில் அமர்ந்து அவருடைய போதனைகளைக் கேட்க நம்மை அர்ப்பணிக்க வேண்டும். பொருத்தமில்லாத உணவை சாப்பிடும்போது நம்முடைய உடலில் பாதிப்பு ஏற்படும். நாம் சுகத்தோடு வாழ வேண்டுமானால் ஆரோக்கியமான ஆகாரத்தை சாப்பிடவேண்டும். அதுபோல நம்முடைய ஆத்துமாவுக்கு தேவையான ஆகாரம் அதாவது, ஆரோக்கியமான உபதேசத்தைக் கேட்டால் நம்முடைய ஆத்துமா ஆரோக்கியமாக இருக்கும் செழித்தோங்கும். நன்மையினால் மகிழும் குழப்பம் இருக்காது. விசுவாசிகள் எளிதாக சோதனைகளில் விழுந்துபோகிறார்கள் ஒரு சிறிய சோதனைகளைக்கூட தாங்கமுடியவில்லை. ஆகவே நாம் குழந்தைகளாயிராமல் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ச்சியடைய அவருடைய பாதத்தில் விழுந்து போதனையடைய வேண்டும். நாம் எந்த நிலைமையில் இருக்கிறோம் என்பதை கர்த்தர் கவனித்துப் பார்க்கிறார். கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது. ஆவிக்குரிய வாழ்க்கையிலே நீங்கள் வளரவேண்டும் நாளுக்கு நாள் அவரை அறிகிற அறிவிலே வளர வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். நீங்கள் வளர வேண்டுமானால்.

1பேதுரு 2:1-3 “இப்படியிருக்க, கர்த்தர் தயையுள்ளவரென்பதை நீங்கள் ருசிபார்த்ததுண்டானால், சகல துர்க்குணத்தையும், சகலவித கபடத்தையும், வஞ்சகங்களையும், பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்துவிட்டு, நீங்கள் வளரும்படி, புதிதாய் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்”.

நம்முடைய துர்க்குணத்தை ஒழித்துவிட்டு தேவனுடைய பாதத்தில் அமர்ந்து அவருடைய வார்த்தைகளை மிகுந்த வாஞ்சையோடு நாம் கற்றுக்கொண்டால் நம்முடைய உள்ளான மனுஷன் பெலப்படுவதைக் காணமுடியும். சோதனைகள் வரும்போது பிரச்சனைகள் வரும்போது அதை எளிதாக மேற்கொள்ள வேண்டுமானால் உள்ளான மனிதன் நாளுக்கு நாள் பலப்பட்டிருக்க வேண்டும். அநேகர் புறம்பான மனிதன் அதாவது இந்த சரீரத்தைக்குறித்து கவலைப்படு கிறார்கள். ஆனால், உள்ளான மனிதனைக்குறித்து கவலைப்படுவதில்லை. சிலர் ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு சபைக்குச் செல்வார்கள் அவர்கள் சரியான உபதேசத்தைக் கேட்டு வளர முடியாது. நம்முடைய ஆண்டவர் நமக்கு சரியான உபதேசத்தைக் கற்றுக்கொடுக்கிறார். ஆகவே நாம் அவருடைய பாதத்தில் அமர்ந்து நம்மைத் தாழ்த்தி அவருடைய உபதேசத்தைக் கவனமாகக் கேட்டுக் கைக்கொண்டால் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளரமுடியும். ஆமென்.

## உங்களைப் பற்றிய சாட்சி என்ன?

**ஆபிரகாம் :** தேவனுக்கு பயப்படுகிறவன் (ஆதி.22:12). தேவனுடைய சிநேகிதன் (ஏசாயா 41:8). விசுவாசிகளின் தகப்பன் (ரோமர் 4:12).

**மோசே :** பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவன் (எண்.12:3) தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவன் (எண்.12:7).

**யோபு :** உத்தமன், சன்மார்க்கன், தேவனுக்கு பயப்படுகிறவன், பொல்லாப்புக்கு விலகுகிறவன் (யோபு 1:1).

**எலியா :** பரிசுத்தவான் (2 இராஜா.4:9), தேவனுடைய மனுஷன் (1 இராஜா.17:24), கருத்தாய் ஜெபிக்கிறவன் (யாக்.5:17).

**எஸ்றா :** தேறின வேதபாரகன். இருதயத்தை பக்குவப்படுத்தியவன் (எஸ்றா 7:10,11).

**தாவீது :** இருதயத்திற்கு ஏற்றவன் (1 சாமு.13:14; 16:7).

**சாமுவேல் :** கர்த்தர் சவுலை ராஜாவாக்கியதற்கு மனஸ்தாபப்பட்டபோது, அதை நினைத்து சாமுவேல் மனம் நொந்து, இராமுழுவதும் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார். அவர் அநியாயம் செய்யவும் இல்லை. இடுக்கண் செய்யவுமில்லை; பரிதானம் வாங்கவும் இல்லை (1 சாமுவேல் 15:11; 12:1-4).

**மரியாள் :** தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்து கொண்டவள் (லூக்கா 10:38-42).

**நாத்தான்வேல் :** கபடமற்ற உத்தம இஸ்ரவேலன் (யோவான் 1:47).

**அப்பொல்லோ :** வேதாகமத்தில் வல்லவன், ஆவியில் அனலுள்ளவன், தைரியமாய் போதிக்கிறவன். சாதுரியவான் (அப். 17:24,25).

**அனனியா :** வேத பிரமாணத்தின்படி பக்தியுள்ளவன், நல்லவன் (அப்.22:12).

**தீமோத்தேயு :** மாயமற்ற விசுவாசத்தை உடையவன் (2 தீமோ.1:4,5).

**தேமேத்திரியு :** எல்லாராலும் நற்சாட்சி பெற்றவன் (3 யோவான் 1:12).

**காயு :** சத்தியத்தில் நடப்பவன், அன்புள்ளவன், உண்மையுள்ளவன் (3 யோ.1:1-6).

**எப்பாப்பிரா :** போராடி ஜெபிக்கிறவர் (கொலோ.4:12).

**தீகிக்கு :** உண்மையுள்ள ஊழியன் (கொலோ.4:7; எபே.6:21).

**எப்பாப்பிராதீத்து :** கிறிஸ்துவின் ஊழியத்தின் நிமித்தம் தன் பிராணனையும் எண்ணாதவர் (பிலி.2:25-30).

**யோவான் :** அன்பாயிருந்த சீஷன் (யோவான் 21:20).

**ஆக்கில்லா-பிரிஸ்கில்லா :** கழுத்தைக் கொடுத்தவர்கள் (ரோமர் 16:3-5).

**சகரியா-எலிசபெத்து:** கர்த்தருடைய சகல கற்பனைகளின்படியும், நியமங்களின் படியும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள் (லூக்கா 1:5,6).


**ஏனோக்கு :** தேவனுக்கு பிரியமானவன் (எபி.11:5).

**பர்னபா :** அவன் நல்லவனும், பரிசுத்த ஆவியினாலும் விசுவாசத்தினாலும் நிறைந்தவனுமாயிருந்தான் (அப்.11:24).

“நல்லது உண்மையும் உத்தமுமான ஊழியக்காரனே வந்து உன் எஜமானனுடைய சந்தோஷத்தில் மகிழ்ந்திரு” என்ற வார்த்தைகளுக்கு தகுதியாய் வாழ்வோம். சாட்சியைக் காத்துக்கொள்வோம்!.



# Lessons from CORONA




**Rev. பெகின் சாமுவேல்**

(AGCM Director)


அன்பான பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த இதழ் மூலமாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். கடந்த நாட்களில் நம்மை கர்த்தர் கண்ணின் மணிபோல பாதுகாத்து, இந்த நாட்களில் இன்னும் தேவ கிருபையினால் நம்மை காத்து வருகிற தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் மே மாதத்தில் ஆன்லைன் மூலமாக ஐந்து நாட்கள் AGVBS நடத்த தேவன் உதவி செய்தார். அந்த Material-ஐ தமிழ்பிரதேசத்தின் அநேக சபைகள் பயன்படுத்தி ஆசீர்வதிக்கப்பட்டனர். பல சிறுவர்கள் இதன் மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டதை அறிந்து, நாங்கள் தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். இதை அதிக பிரயாசத்துடனும், ஜெபத்துடனும் தயாரித்து வெளியிட்டோம். இதற்கு எங்களை உற்சாகப்படுத்திய, ஒத்துழைத்த, உதவிய, ஜெபித்த தமிழ்பிரதேச தலைவர்கள், மண்டல போதகர்கள், சிறுவர் ஊழியர்கள், ஸ்தல சபைப் போதகர்கள் அனைவருக்கும் சிறுவர் ஊழியங்களின் சார்பாக என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். தேவனுக்கே மகிமை செலுத்துகிறோம்.

கடந்த சில மாதங்களாக நாம் அனைவரும் லாக்டவுணினால் வீட்டிற்குள்ளே இருக்கிறோம். இப்போது சில தளர்வுகள் கொஞ்சம் கொஞ்சமாக அறிவிக்கப்பட்டுள்ளதால் விரைவில் நிலைமை சீரடையும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். கடந்த வருடம் முழுவதும் நமது குழந்தைகள் ஆன்லைன் மூலமாகவே பள்ளிப்பாடங்களை பயின்றனர். இந்த கல்வி ஆண்டில் பிள்ளைகள் பள்ளிக்கு சென்று பாடங்களை கற்றுக்கொள்ளும் சூழல் உருவாக நாம் ஜெபிப்போம். கர்த்தர் நிச்சயமாக அப்படிப்பட்ட அநுகூலங்களை நமக்கு உண்டாக்கி தருவாராக.

இந்த கொரோனா தொற்றுக்காலத்தில் வாழும் நாம் இதிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய சில காரியங்கள் உள்ளது. இந்த கொடிய வைரஸிலிருந்து நம்மை பாதுகாக்க அரசாங்கம் சில வழிமுறைகளை பின்பற்ற நம்மை அறிவுறுத்துகிறது. அதே போன்று நம்மை அழிக்க நினைக்கும் பிசாசிடமிருந்து தப்பிக்க நாம் சில காரியங்களை பின்பற்ற வேண்டியது அவசியமாயுள்ளது.

**1. முகக் கவசம் (Wear Face mask)**

இக்காலக்கட்டத்தில் நாம் எங்குசென்றாலும் எப்போதும் முகக்கவசம் அணிய அறிவுறுத்தப்படுகிறோம். முகக்கவசம் அணிவதின் நோக்கம் நம்மை கிருமிகளிடமிருந்து பாதுகாத்துக்கொள்வதுதான். நமது கிறிஸ்தவ வாழ்க்கையிலும் எவனை விழுங்கலாமென்று சுற்றித் திரியும் பிசாசனவன் நம்மைத் தொடாமலிருக்க நாம் தேவனோடு நெருங்கி ஜீவித்தல் அவசியம். அதற்கு நமக்கு உறுதுணையாக இருப்பது ஜெபமும், வேதவாசிப்பும். எனவே இதை உங்கள் முகக்கவசமாக அணிந்து பிசாசானவனின் தாக்குதலிலிருந்து உங்களை காப்பாற்றிக்கொள்ளுங்கள்.

**2. சானிடைசர் (Use Sanitizer)**

அடுத்ததாக, கொரோனா வைரஸிடமிருந்து நம்மை பாதுகாத்துக்கொள்ள நாம் முக்கியமாக பயன்படுத்த வேண்டியது சானிடைசர். அடிக்கடி சானிடைசர் அல்லது சோப் உபயோகித்து கைகழுவுவதன் மூலம் நம் கைகளில் இருக்கும் வைரஸ் கிருமிகள் எளிதாக அழிக்கப்பட்டுவிடும். அதனால் நோய்க்கிருமிகள் நம்மை நெருங்க முடியாது. இதேபோல், இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் பாவமற கழுவப்பட்ட பிள்ளைகளை சாத்தான் நெருங்க முடியாது. வேதம் சொல்லுகிறது. அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். நமக்குப் பாவமில்லையென்போமானல், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம். (1 யோவான்1:7,8) எனவே நம்முடைய இருதயங்கள் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் பாவமற கழுவப்பட இடமளிப்போம்.

**3. தனித்திரு (Stay alone)**

இறுதியாக, அரசாங்கம் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த பயன்படுத்திய வாசகம் தனித்திரு, விழித்திரு, வீட்டிலிரு என்பதாகும். கொரோனாவிடமிருந்து நம்மை பாதுகாத்துக்கொள்ள நாம் தனித்திருக்க வேண்டும். அதற்காக அரசாங்கம் கையிலெடுத்ததுதான் லாக்டவுண். இதனால் மக்கள் அனைவரும் வீட்டில் தனித்திருந்தனர். இதனால் தொற்றிலிருந்து பாதுகாக்கப்பட்டனர். இயேசு சொல்கிறார், நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள் (மத்.26.41). இயேசுவும் தனித்திருந்து ஜெபிக்கும் பழக்கத்தை வைத்திருந்தார் (மத்.17.1). எனவே பிசாசை ஜெயிக்க, அவனை மேற்கொள்ள நாமும் அதிக நேரம் தனித்திருந்து ஜெபிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துவோம். பிசாசின் கிரியைகளை அழிப்போம்.

தேவனுடைய கிருபையும், சமாதானமும் நம்மனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.

---

## போட்டி எண் : 87 (சரியான விடை எழுதியவர்கள்)

**செங்கோட்டை:** ராணி பிளஸ்சிங்; K.ராஜீ; L.குளோரி; K.மஞ்சு; சித்ரா பிளஸ்சி; E.கலா; A.கிறிஸ்டி; S.எஸ்தர்கலா; K.சுபா; M.தங்கமணி; M.கனகவல்லி; V.மேகலா; மயில்ராஜீ; ராதாமணி; V.பியூலா; G.முத்துலெட்சுமி; M.சந்தியா; T.கலா; D.ரோஸ்லின்; A.மேரி; E.இம்மானுவேல் சாம்; A.புனிதவள்ளி; பூங்கோதை; S.ஜெயா, பிரேமலதா; S.பிரியா; S.முத்துலெட்சுமி; R.ஜெயலின்; ஞானபூரணம்; கிரிஜா; மாது; | **திருநின்றவூர்** : எழலரசி; ரோசி; | **தேனி** : பூமணி ஜான்சி; பிரின்சி; ஜீடித் நிம்சி; | **KTC நகர்** : பிரேமா ரூத்; சில்வியா;|**அச்சிறுப்பாக்கம்** : ஜென்ஸி; தமிழ்ச்செல்வி; |**விளாத்திகுளம்** : கீர்த்தனா; |**நெல்வாய்** : பிளஸ்ஸி;|**தூத்துக்குடி** : ஃபீபி ஷெக்கினா; |**வல்லம் (த)** விஜி; |**கம்மாபுரம்** : S.சுகிர்தா;| **அகஸ்தியர்பட்டி** : நிர்மலா; |**கடாட்சபுரம்** : ரேவதி; |**ஆம்பூர்** : கிரிஜா சத்யா;

## போட்டி எண் - 87

**(ஆபகூக் முதல் மல்கியா வரை சரியான விடைகள்)**

**ஆபகூக்:**1.கல்;உத்திரம்;2.சந்திரனும் சூரியனும்; 3.குதிரைகள் **செப்பனியா** : 1.சீயோனைப், தளரவிடாதே;2.கர்த்தரை, நீதியைத், மனத்தாழ்மையை; 3.வெள்ளியும், பொன்னும், தப்புவிக்கமாட்டாது; **ஆகாய்** : 1.வானத்தையும், பூமியையும், சமுத்திரத்தையும், வெட்டாந்தரையையும், 2.உங்கள் வழிகளை; **சகரியா** : 1.யூதாவின்

**(ஆபகூக் முதல் மல்கியா வரை சரியான விடைகள்....)**

கூடாரங்களை;2.யோசுவா; 3.அற்பமான ஆரம்பத்தின் நாளை; 4.அரணுள்ள சோலை; 5.சேபாத்; 6.யூதாவின் ராஜாவாகிய உசியா; 7.வாலிபரையும், கன்னிகைகளையும், 8.எப்பிராயீமர்; 9.மேய்ப்பனை வெட்டு, ஆடுகள்; 10.ஒரு ஸ்திரீ; 11.கிஸ்லே; 12.கர்த்தருக்கு முன்பாக ;13.யோசியா; 14.சத்திய நகரம், சேனைகளுடைய கர்த்தரின் பர்வதம்; **மல்கியா** : 1.தள்ளி விடுதலை; 2.ஏசாவையோ; 3.கர்த்தர், மாறாதவர்;4. கட்டளைகளையும், நியாயங்களையும்.

## பரிபூரண ஜீவன் போட்டி எண் - 88

**மத்தேயு சுவிசேஷம் (புதிய ஏற்பாடு) இருப்பிடத்துடன் விடை எழுதவும்**

1. கானானிய ஸ்திரீ எந்த திசைகளிலிருந்து வந்தாள்?
2. இம்மானுவேல் என்பதற்கு -------- என்று அர்த்தமாம்.
3. இங்கே இருப்பவன் தன் வஸ்திரங்களை எடுப்பதற்கு திரும்பாதிருக்கக் கடவன்?
4. இதினால் அவர்களை அறியலாம்?
5. அர்கெலாயுவுக்கு தகப்பன் யார்?
6. இது மகாராஜாவின் நகரம்?
7. ததேயு என்னும் மறுநாமமுள்ள --------
8. வானப்பரிந்தம் உயர்த்தப்பட்ட பட்டணம் எது?
9. எது ராஜ்ஜியத்தின் புத்திரர்? எது பொல்லாங்கனுடைய புத்திரர்?
10. உயிர்த்தெழுதல் இல்லையென்று சாதிக்கிறவர்கள் யார்?
11. எந்த பட்டணங்களுக்கு ஐயோ?
12. ஒலிவ மலைக்கு அருகான பட்டணம் எது?
13. இயேசு எந்த வீட்டாரிடத்திற்கு போங்கள் என்றார்?
14. காவல் பண்ணப்பட்டவர்களில் ஒருவனான இவன் யார்?
15. யாருடைய ரூபன் மின்னல் போல இருந்தது?
16. அரிமத்தியா ஊரானாகிய இவன் யார்?
17. சமாதானம் பண்ணுகிறவர்கள் யாருடைய புத்திரர் என்னப்படுவார்கள்?
18. எதை பன்றிகள் முன் போடக்கூடாது?
19. இயேசு எங்கே வந்து வாசம் பண்ணினார்?
20. இயேசுவின் கீர்த்தி எங்கே பிரசித்தமாயிற்று?

விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 10.08.2021

சரியான விடை எழுதி அனுப்புகிறவர்கள்
தங்கள் முழு முகவரியுடன் விடையை எழுதி அனுப்பவும்.



**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**

**Mrs.சாந்திபால்**
16/50 கொல்லம் மெயின் ரோடு, சீயோன் ஏ.ஜி. சர்ச்
SETC BUS டிப்போ அருகில், செங்கோட்டை - 627 809
தென்காசி (மாவட்டம்). செல் : 88077 18002

# தேவனுக்காக எரிந்து பிரகாசித்த விளக்கு



தோற்றம்
26.09.1950

மறைவு
03.05.2021

## சங்கை ஐ.அலெக்ஸாண்டர்

சங்கை ஐ.அலெக்ஸாண்டர் அவர்கள் 26.09.1950-ம் ஆண்டு பிறந்தார். தன்னுடைய இளம் பிராயத்தில் தேவனுடைய ஊழியத்தை செய்வதற்காக தன்னை அர்ப்பணித்து, வேதாகம பயிற்சிக்காக தென் ஆசிய வேதாகம கல்லூரியில் படித்து பட்டம் பெற்றார். பின்பு, சென்னை மயிலாப்பூரில் சபை ஆரம்பித்தார். அந்த ஊழியத்தை கர்த்தர் ஆசீர்வதித்து பெருக செய்தார். 1977-ம் ஆண்டு சகோதரி ரெஜீனா அவர்களை திருமணம் செய்தார்.

மயிலாப்பூரில் ஊழியம் வளர்ந்து கொண்டிருந்த நாட்களில் 1978ம் ஆண்டு நமது ஸ்தாபனத்தின் மூலம் மதுரையில் உள்ள தமிழ்நாடு வேதாகம கல்லூரிக்கு ஆசிரியராக நியமிக்கப்பட்டார். 1983-ம் ஆண்டு முதல் மூன்றரை ஆண்டுகள் சரீரத்தில் மிகவும் பெலவீனப்பட்டு படுக்கையில் சில மாதங்கள் இருந்தார். அவருடைய விசுவாசத்தினாலும், பலருடைய ஜெபத்தினாலும் கர்த்தர் அவரை மறுபடியும் எழுப்பினார்.

18 ஆண்டுகள் தமிழ்நாடு வேதாகம கல்லூரியின் ஆசிரியராகவும், Dean of Students ஆகவும் ஊழியம் செய்தார். ஆரம்ப காலங்களில் நமது ஸ்தாபனத்தில் “பரிபூரண ஜீவன்” வானொலி நிகழ்ச்சியின் உரையாடலில் பல ஆண்டுகள் பங்கெடுத்தார்கள். வேதாகம கல்லூரியில் ஆசிரியராக ஊழியம் செய்த நாட்களில் மதுரையில் கே.கே.நகர் சபையை நிறுவினார். பின்னர் விசுவநாதபுரம் (மதுரை) சபையையும் பொறுப்பேற்று நடத்தினார். பின்பு 1997-ம் ஆண்டு மதுரையில் நாகமலை புதுக்கோட்டையில் உள்ள AG சபையில் போதகராக பொறுப்பேற்று முழு நேரமாக ஊழியம் செய்தார். பின்னர் 2011-ம் ஆண்டில் தனது ஸ்தல சபை பொறுப்பை விடுத்து, முழுநேரமாக அகில இந்திய AG ஜெப ஒருங்கிணைப்பாளராக போதகர் D.மோகன் அவர்களுடன் இணைந்து கடைசிவரை செயல்பட்டார். அதோடுகூட நமது ஸ்தாபனத்தில் மண்டல தலைமை போதகராக பல இடங்களில் ஊழியம் செய்தார். மேலும் பரிபூரண ஜீவன் என்னும் பத்திரிக்கையின் ஆசிரியராக பல ஆண்டுகள் கர்த்தரின் ஊழியத்தை நிறைவேற்றினார்.

கர்த்தர் அவருக்கு ஏஞ்சலினா என்ற மகளையும், போதகர் லாரன்ஸ் மனோஜ்குமார் என்ற மருமகனையும், ரோஷிணி, லாஷா என்ற பேரப்பிள்ளைகளையும் கொடுத்து ஆசீர்வதித்தார். அவருடைய அபிஷேகம் நிறைந்த ஊழியத்தினாலே ஆசீர்வதிக்கப்பட்டோர், ஆறுதலடைந்தோர் பல லட்சங்களும் உண்டு, பல சபைகளும் உண்டு.

“என்றைக்கு நான் ஒரு நபருக்கு சுவிசேஷம் சொல்ல முடியாமல் இருக்கும் சூழ்நிலை வருமோ அன்று நான் கர்த்தருடைய இராஜ்யத்தில் இருப்பேன் என்று தனது இறுதி காலங்களில் அவர் சொன்னபடியே, தன்னுடைய நல்ல போராட்டத்தை போராடி ஓட்டத்தை ஜெயமாக ஓடி முடித்து 03.05.2021 அன்று மாலை 04:20 மணியளவில் மகிமைக்குள் பிரவேசித்தார்.

Registered News Paper Regd. No. 8206 / 62

JULY 21 WEDNESDAY

Youth Ministry of Tamizh Pradesha Assemblies of God

*Presents*

# Youth Camp - 2021

**Time : 6 to 8 pm** online

*Theme : Digital Dependence*



Chief Guest :

## Dr. Renny Samuel

Dean, CGLD School of Counselling, Bangalore.

*Dont miss it..*

# மெகா வேதவினா போட்டி – 2021

**வேதபகுதி : மீகா, மத்தேயு, மாற்கு**

**நாள் : செப்டம்பர் 19, ஞாயிறு**

1st Prize
Rs. 30,000 Worth

2nd Prize
Rs. 20,000 Worth

3rd Prize
Rs. 10,000 Worth

**பதிவுக்கட்டணம் : ரூ. 25 மட்டுமே**

20 நபர்களுக்கு மேல் பங்குபெறும் தேர்வு எழுதும் எல்லா சபைகளுமே தேர்வு மையங்கள்.

## மண்டல அளவில் நடைபெறும் போட்டிகள்

போட்டிக்கான வேதபகுதி

**மனப்பாட வசனம் : பிரசங்கி**

**Memory Verse : Ecclesiastes**

**வேதவினா போட்டி : 1 சாமுவேல்**

**Bible Quiz : 1 Samuel**

BOOK POST

If Undelivered please return to

**PARIPOORANA JEEVAN**

30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 2301165